தமிழ்த்துறை வழங்கும் !!!

செங்காந்தள்

மாணவியர் இதழ்- 1



உலக தாய்மொழி தின சிறப்பிதழ்

பிப்ரவரி 21 - 2025

தமிழ்த்துறை

வழங்கும் !!!

செங்காந்தள்

மாணவியர் இதழ்- 1

உலக தாய்மொழி தின சிறப்பிதழ்

பிப்ரவரி 21 - 2025



பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி, தேவியாக்குறிச்சி.


தலைவாசல் வட்டம், ஆத்தூர், சேலம் மாவட்டம்.

அலைப்பேசி- 9442700889, 9442700999, 9047673999.

உள்ளே....

- கவிதைத் துளிகள்
- பொன்மொழிகள்
- நகைச்சுவை துணுக்குகள்
- படித்ததில் பிடித்தது
- சிறுகதை, கட்டுரை, ஓவியம்
- தமிழ்த்துறை நிகழ்வுகள்
- முன்னாள் மாணவிகளின் மதிப்பீடு
- மாணவிகளின் சாதனைகள்

சிறப்புரை



தாய்மொழி என்பது அனைவருக்கும் அடையாளம் தருவது. பிற மொழிகள் எல்லாம் பேச்சாக இருக்கும் பொழுது தமிழ் மட்டுமே நமக்கு உயிர் மூச்சாகவும் இருக்கின்றது. உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு நமது பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் முன்னெடுத்துள்ள செங்காந்தள் எனும் நூல் வெளியீட்டு பணியை எண்ணி உளம் மகிழ்கின்றேன். இச்செயல் மாணவியருக்கு மட்டுமல்லாது பேராசிரியர்களுக்கும் ஊக்கத்தை தரும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. ஆண்டுகள் பலவாகினும்! ஆற்றல் மாறாது! அழகு குறையாது! நம் அகத்தில் நிறைந்து! அகிலத்தில் சிறந்திருக்கும்! நமது தாய் மொழியாம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக தமிழ்த்துறை சார்ந்த பேராசிரியர்களும் மாணவிகளும் எடுத்துள்ள இப்பணியில் தொடர்ந்து செயல்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதோடு இவ்வரிய பெரிய முயற்சிக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தலைவர் செ. இளையப்பன்

பாரதியார் மகளிர் கல்வி நிறுவனங்கள் தேவியாக்குறிச்சி.

அணிந்துரை



உலகத் தாய்மொழி தினம் இன்று பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை சார்பாக "செங்காந்தள்" எனும் நூல் வெளியிடப்படுகிறது. இந்நூல் நம் தமிழ்த்துறை மாணவிகளின் படைப்புத்திறன்களை மெய்ப்பிக்கும் வகையில் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், பொன்மொழிகள், நகைச்சுவை துணுக்குகள் மற்றும் படித்ததில் பிடித்தது என எண்ணிலடங்கா படைப்புத்திறன்களை உள்ளடக்கியது. மேலும், இவ்வாண்டு அவர்கள் புரிந்த சாதனைகளும், பரிசுகளும் இங்கே தொகுத்து தரப்பட்டுள்ளன. இந்நூல் சிறப்புற அமையவும், தமிழ் இலக்கியம் பயிலும் மாணவியர்களுக்கு புதுவாழ்வு வழங்கும் ஆர்வமும், ஆற்றலுமுடைய பேராசிரியர்கள் பல சாதனைகளை படைத்து மாணவச் செல்வங்கள் மென்மேலும், முயற்சியும், பயிற்சியும் பெற்று தமிழ்த்துறையில் வளர்ந்து வெற்றி வாகைச்சூட வாழ்த்துகிறேன்.

செயலர், டாக்டர் ஏ. கே. இராமசாமி அவர்கள்,
பாரதியார் மகளிர் கல்வி நிறுவனங்கள்
தேவியாக்குறிச்சி.

வாழ்த்துரை...



மனிதனுக்கு மொழி இல்லையெனில் உணர்வில்லை. வாழ்வில்லை.தாய் மொழியே ஓர் இனத்தின் நாகரிகத்தையும், பண்பாட்டையும், அரசியல், பொருளாதாரத்தையும் பிரதிபலிக்கின்றது கனிச்சுளையும்! கழைச்சாறும்! மலர்தேனும்! பசும்பாலும்! இளநீரும்! சுவையாகினும்! தமிழ் என் உயிரானது!!! என்று கூறிய பாவேந்தரின் போற்றுதலுக்குரியது தமிழ்மொழி. உலகத் தாய்மொழி தினத்தை முன்னிட்டு தாய் மொழியான நம் அன்னைத் தமிழுக்கு அணி செய்யும் நோக்கில் நமது பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை சார்பில் "செங்காந்தள்" எனும் நூல் வெளியிடப்படுகின்றது தமிழ்த்துறை சார்ந்த பேராசிரியர்களும் மாணவியரும் மேற்கொண்ட இம்முயற்சிக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இனி ஒவ்வொரு ஆண்டும் இப்பணி மேலும் தொடரவும் விழைகின்றேன்.

S.R.T. செல்வமணி பொருளாளர்

பாரதியார் மகளிர் கல்வி நிறுவனங்கள்

தேவியாக்குறிச்சி.

வாழ்த்துரை...



வாழ்க்கைக்கு இலக்கணமாக பயிற்சியை பாடமாக்கி தன்னம்பிக்கை கொண்டு புதிய முயற்சியோடு முன்னேற்றப் பாதையில் வெற்றிவாகை சூடி மாணவிகளை நல்வழிப்படுத்த சிறந்த வழிகாட்டியாகவும், முன்னோடியாகவும் அழைத்துச் செல்வதில் தமிழ்த்துறை எப்பொழுதும் தன்னிகரற்ற துறையாக விளங்குகிறது. எப்பொழுதும் எந்த செயலைச் செய்தாலும் அதில் புதுமையாகச் செய்து ஆர்வத்தை ஏற்படுத்தும் திறம் படைத்த பேராசிரியர்கள். இது போன்று மென்மேலும் சிறந்து விளங்க வாழ்த்துகிறேன்.

நன்றி

முதல்வர்

முனைவர் தே. இராஜகுமாரி

பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி.

நன்றியுரை



எம் துறை சார் மாணவ கண்மணிகளும் கல்வி கேள்விகளோடு சிறந்து விளங்கி பல்வேறு திறன்சார் போட்டிகளிலும் வெற்றிவாகை சூடுவதோடு படிப்பு மட்டுமல்லாமல் பேச்சாற்றல், எழுத்தாற்றல், பா புனைதல், பொது அறிவு என பன்முக திறன்களோடு சிறப்பு செய்து தமிழ்த்துறைக்கும், பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரிக்கும் பெருமை சேர்த்து வருகின்றனர். பேராசிரியர்களும், மாணவிகளும் ஒருங்கிணைந்து செயலாற்ற எங்களை நல்வழிப்படுத்திச் செல்லும் புதுமை பெண்ணாம் ஆளுமைத்திறன் கொண்ட எம் கல்லூரி முதல்வர் முனைவர் தே. இராஜகுமாரி அம்மா அவர்களுக்கும், கல்வி நிறுவனங்களின் தலைவர் செ. இளையப்பன், செயலர் ஏ.கே.இராமசாமி, பொருளாளர் எஸ்.ஆர்.டி. செல்வமணி மற்றும் அனைத்து இயக்குனர் பெருமக்களுக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம். இனி வரும் காலங்களில் இது போன்ற சிறப்பான செயல்களை செய்து கல்வித்துறையில் சாதனைகள் புரிய வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு

முனைவர் சு.இந்திரா

தமிழ்த்துறைத் தலைவர்.

தமிழ்த்துறை

சிறப்புகள்

- பல்கலைக்கழக அளவில் 7 தங்கப்பதக்கங்கள்.
- பெரியார் பல்கலைக்கழக அளவில் 57 தரவரிசைப் பட்டியல்கள்.
- NET/SET/Ph.D. தகுதி வாய்ந்த அனுபவமிக்க பேராசிரியர்கள்.
- பன்னாட்டுக் கருத்தரங்கம்/ தேசிய கருத்தரங்கம்.
- பயிற்சிப்பட்டறைகள்.
- கல்விச் சுற்றுலா/ திறன் மேம்பாட்டுப்பயிற்சி.
- வள்ளலாரின் 201-வது பிறந்தநாள் விழாவில் ஆளுநர் மாளிகையில் பங்கேற்பு.
- சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான சபை பேரணி.
- பன்னாட்டு பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- வருடம் தோறும் செங்காந்தள் மாணவர் ஆண்டு இதழ் வெளியீடு.

பாடப்பிரிவுகள்

- B.Lit. (பி.லிட் தமிழ்).
- M.A. (எம். ஏ தமிழ்).
- M.Phil. (ஆய்வியல் நிறைஞர்).
- P.hD (முனைவர் பட்டப்படிப்பு).

துறைசார் வேலை வாய்ப்புகள்

- ஆசிரியர் பணி
- பேராசிரியர் பணி
- அரசுப் பணி
- ஊடகத் துறை
- திரைப்படத் துறை
- அயல் நாடுகளில் வேலைவாய்ப்பு
- பேச்சாளர்
- எழுத்தாளர்
- பன்முகக் கலைஞர்
- தமிழ் மென்பொருள் உருவாக்கப்பணி
- மொழிபெயர்ப்புப் பணி
- பதிப்புத் துறை
- மின்னூலாக்கப் பணி
- அயலக தமிழ்ப் பிரிவுகளில் பணி வாய்ப்புகள்
- இணையத்தில் தமிழ்ப் பணி வாய்ப்புகள்
- ரயில்வே துறையில் (குரூப் D) பணிவாய்ப்புகள்

தமிழ்த்துறை பேராசிரியர்கள்...

- முனைவர் சு. இந்திரா M.A., NET., M.Phil., Ph.D.,
- மா. ஷர்மிளா, M.A., M.Phil., B.Ed., SET.,
- வி. ரேகா M.A., M.Phil., B.Ed.,
- ரா. ஐஸ்வர்யா M.A., B.Ed., TET.,
- கு. நிவேதா M.A., M.Phil., SET.,
- முனைவர். பீ. ரஹ்மத் பீபி M.A., T.P.T., P.P.T., Ph.D.,
- க. புஷ்பா M.A., B.Ed., M.Phil.,
- அ. ரஞ்சிதா M.A., M.Phil., NET.,
- ந. ரேவதி M.A., B.Ed., M.Phil.,
- க. சுமதி M.A., M.Phil., NET.,
- முனைவர் ஸ்ரீ. அழகுலெட்சுமி M.A., M.Phil., NET., SET., Ph.D.,
- முனைவர் தி. மணிமேகலை M.A., M.Phil., B.Ed., Ph.D.,
- பி. திவ்யா M.A., M.Phil., B.Ed., NET.,
- நா. உமாராணி M.A., M.Phil.,
- கோ. ஜானகி M.A., B.Ed., M.Phil.,
- மு. கலைச்செல்வி M.A.,

கவிதைத் துளிகள்

தாய்மொழி

என் ஒய்யாரத் தமிழ்....
கடுகு சிறுத்தாலும்
காரம் குறைவதில்லை....
குறளாகி சிறுத்தாலும்
காலம் மறப்பதில்லை....
குயில் பாட்டு கேட்டாலும்
தமிழ் பாட்டு தாயாகும்....
தாலாட்டு தினம் கேட்டு
குருதியிலே தமிழ் சேரும்....
அமிழ்தென்று சொன்னாலே
வாயும் இனிப்பதில்லை....
தமிழ் என்று சொன்னாலே
இனிமை மறக்கவில்லை....

செ திவ்யா
மூன்றாம் ஆண்டு தமிழ் இலக்கியவியல்.

தாய்மொழி எம் தமிழ்மொழி

அறம் கூறும் அன்பு மொழி...

ஆதியில் மலர்ந்த மொழி ...

இளமை மாறாத மொழி ...

ஈடில்லாத பழமை மொழி ...

உயிருடன் வாழும் மொழி ...

ஊக்கமூட்டும் மொழி ...

எட்டுத்திக்கும் பரவும் மொழி...

ஏழைக்கு உதவும் மொழி ...

ஐய்யன் கண்டெடுத்த மொழி...

ஒற்றுமை காக்கும் மொழி ...

ஓத உதவும் மொழி ...

ஔடதமாக விளங்கும் மொழி...

அஃதே என் செம்மொழியான தாய் மொழி !

சா. சாரதி

முதுகலை தமிழ் முதலாம் ஆண்டு.

உணர்வு மொழி

உயிர் நாவில் உருவான தாய் மொழி

எம் தாய்மொழியாம் தமிழ் மொழி!

தென்பொதிகையில் பிறந்த மொழி!

முச்சங்கம் வளர்த்த மொழி

தெவிட்டாத தென்மொழி!

அமிழ்தினும் இனிய மொழி!

கொஞ்சம் இலக்கணமும் கெஞ்சும் இலக்கியமும்...

கொஞ்சி பேசும் இயல்பான மொழி !

ஆண்டாண்டுகளாய் வாழும் மொழி!

சொற்கள் சுரங்கமாய் கிடைக்கும் மொழி!

எண்ணமெல்லாம் நிறைந்த மொழி!என் அன்னைமொழி!

ஐயன் வள்ளுவன் வகுத்த மொழி,

ஐவகை நிலத்தோர் பேசும் மொழி

ஐம்பெரும் காப்பியம் தந்த மொழி

இனிமை கூட்டும் இன்ப மொழி

ஈடில்லா தொன்மை புகழ் வாய்த்தமொழி

அவ்வை பாடிய இலக்கிய மொழி

யாதும் ஊராகி செழித்த மொழி

நன்றும் தீதும் விளக்கிய மொழி

ஓங்கி ஒலிக்கும் சமத்துவ மொழி

உவகையூட்டும் கவிதை மொழி

உணர்வை செதுக்கும் அமுதமொழி

என் தாய்மொழி மூன்றெழுத்தில்

உலகாளும் என் தமிழ்மொழி.....

இரா. சுஜாதா

முதுகலை தமிழ் இரண்டாம் ஆண்டு.

உயர் தனிச்செம்மொழி

செம்மொழியை என் அமிழ்தான தமிழே திகட்டாத தேன்!

முத்தான மொழியால்..

தாய் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும்

அன்னையாக திகழும் அமிழ்தே!

விண்ணைத் தொட்ட என் அன்னை மொழியே....

மனிதன் பிறந்தது வீழ்வதற்கு அல்ல...

வாழ்வதற்கு !- என்று வழி வகுத்த என் தாய் மொழியே

எட்டுத்திக்கும் பரவிக் கிடக்கும் செம்மொழியே

உலகம் உன் கையில் கொண்டு

நான் வாழ்வதற்கே நீயே நல் துணை

மூத்தவளே முதியவளே

பாரதியின் தமிழ் மகளே

வாழிய வாழியவே....!

த. ஆஷா

முதுகலை தமிழ் இரண்டாம் ஆண்டு.

ஆக்க மொழியாம் எம்மொழி

ஒரு காலமும் அழிவில்லாத மொழி
எக்காலத்திலும் அழிக்க முடியாதது மொழி
அஃதே எம் தமிழ் மொழி! வாழியவே.....
பார்எங்கும் விரிந்த புகழ்
எல்லா இடங்களிலும், அது மலை போல.....
அது வானிலும், பூமியிலும் நிலைத்தது,
தமிழே எம்மின் தாயின் பெருமை
அதில் காதல் ஒளிர்ந்தது
மனிதன் சுவாசிக்க தொடங்கிய அக்கணம்.....
முதல் சுவாச மொழியாக திகழும் முதுமொழி.....
தாய்க்கு தாயான செம்மொழி....
அதுவே உலக மொழிகளுக்கு உயிரூட்டியது .....
எம் தமிழ் மொழி.....
தமிழகத்தின் ஆட்சி மொழி அதிகாரப்பூர்வ மொழி
மாநில அரசின் மொழி எமது தாய்மொழி.....
தமிழுக்காக தலைவணங்கும் என் சிரம்....
தமிழ் வளர என் உடல் ஆகட்டும் உரம்....
உயிர் நாவில் உருவான உலக மொழி...
நம் செம்மொழியான தமிழ் மொழியே!....
தமிழ் என் தாயின் பெருமையை கொழிக்கும் ...
என் உள்ளத்தில் எப்பொழுதும்
தமிழ் தாயின் குரல் விரும்பும்....
தமிழின் இசை, நம் உயிரின் தசை..
தமிழ் மொழி நமது உயிரின் உறவு,.....

கோ இலக்கியா
இரண்டாம் ஆண்டு தமிழ் இலக்கியவியல்.

தாய்மொழி

என் தாய் தமிழே!

என் உயிரில் கலந்திருக்கும் தமிழே!

தமிழால் என்னை வளர்த்தாயே!

உன்னை அறிந்திடவே...

இவ்வுலகில் பிறப்பெடுத்தேன் தாயே!

அறிந்தேன்.... மகிழ்ந்தேன்....

மயங்கினேன்.... வியந்தேன்..... தாயே!

எளிமையும் நீ, மெய்யும் நீ,

ஓங்கு அறமும் நீ,பகிரும் நீ,

அன்பும் நீ, இன்பம் நீ,

வீரம் நீ,காதல் நீ,

யாவும் நீயே! என் தமிழ் தாயே!

உலகமெங்கும் தமிழ் மொழி!

பரிசாற்றும் தாயே!

சே. சஹானா

முதலாம் ஆண்டு

தமிழ் இலக்கியவியல்.

உலக தாய்மொழி

பன்மொழி பயின்ற பாவலராயினும்
சிந்திக்கும் மொழியோ தித்திக்கும் தாய்மொழி ..
விந்தைமிகு விஞ்ஞானம் விண்ணளவு
வளர்ந்தாலும் வியத்தகு விளைச்சலின்
வித்தாக தாய்மொழி..
அலுவல் ஆய்வென்று அயல் நாட்டை
அடைந்தாலும் அடையாளம் காட்டிடும்
உயிரின் தாய்மொழி ...
சுழலும் பூமிதனில்....
சுடரொளியாய் திகழ்ந்திட
ஒளி ஏற்றும் திருவிளக்கு
நிகரில்லா தாய்மொழி....
யாசிக்கும் உயிர்களில்....
நேசிக்கும் நெஞ்சங்கள் சுவாசிக்கும் காற்று
பேசுகின்ற என் தாய்மொழி...
மனமாற்றம் செய்திட்டு....
மதமாற்றம் செய்தாலும் மாற்ற இயலாதது..
உயிரான இதயத்தின் தாய்மொழி...
தமிழ் மொழி காப்போம் ..!
தாய் மொழி வளர்ப்போம்...!

கோ.காவியா
முதலாமாண்டு முதுகலை தமிழ்.

தாய்மொழி கல்வி

அகிலமெல்லாம்
அரசாளும் ஆதி மொழிகளுக்கு
அன்னையாய் திகழ்வது
எம்மொழி செம்மொழி...!
காற்றின் கீதத்தையும்
கவிதையின் சொரூபத்தையும்
தன்னகத்தே கொண்டு
தரணியில் பெருமை சொல்லும்
ஒரு வீர மொழி
தமிழ் தாய்மொழி ...!

ர. அனுசுயா
முதலாம் ஆண்டு தமிழிலக்கியவியல்.

வெற்றி

தோல்வி உனது
தொடக்கமாக இருக்கலாம் .....
துவண்டு விடாதே !!!
வெற்றியே உனது
முடிவாக இருக்கட்டும்...

வி.ரேகா
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை.

இயற்கை

மலைகளின் நடுவில்மயில் கூட்டம்

மாலை பொழுதில் குயில் கூட்டம்

கண்ணிற்கெட்டும் தூரத்தில்

கதிரவன் இருள் ஊட்டும் நேரத்தில்

நிலவொளி பார்க்கும் திசைகளில்

பச்சை புல்வெளிகள்பாயும் நீர்களில்

பளிச்சிடும் நீர்த்துளிகள்....

இரவின் இருட்டில்

இதமான மெல்லிசை ஓசை

கண்களை மயக்கும் காந்தள் பூக்கள்....

மேகத்தின் மேலே வெண்பஞ்சுகள்

இதயமாய் என்னை ஈர்க்கும்

இயற்கையே நீ செழிக்க !

க.யமுனா ஸ்ரீ
மூன்றாம் ஆண்டு
தமிழ் இலக்கியவியல்.

தனித்தமிழ்

வள்ளுவனின் ஓலைச்சுவடியில் பிறந்தவளே!
தென்பொதிகை மலையில் தவழ்ந்தவளே!
இளங்கோவின் கையில் செங்கோல் எழுதியவளே!
அன்னைத் தமிழுக்கு அணிகலனாகத் திகழ்ந்தவளே!
முச்சங்கம் வளர்த்தவளே!
சேர சோழ பாண்டியர்களை ஆட்சி செய்தவளே!
இயல் இசை நாடகம் எனும் முத்தமிழாய் உதித்தவளே!
ஐம்பெரும் காப்பியங்களாய் ஒளிர்ந்தவளே!
உயிர் கொல்லாமையை உரக்கச் சொல்ல
ஐஞ்சிறு காப்பியங்களானாய்!
மண்ணாசையை ஒழிக்க மகாபாரதமாய் வந்தாய்!
பெண்ணாசையை ஒழிக்க இராமாயணமாய்
அவதாரம் எடுத்தவளே!
காப்பியக் குடிதனிலே பல காவியங்கள் கண்டவளே!
கணிகையர்குலம் மங்கையை மாண்புறச் செய்தவளே!
ஒற்றை வரியில் ஆத்திச்சூடியாய் அமிழ்தத்தை தந்தவளே!
இரண்டு வரிகளிலே திருக்குறளாய்
முப்பாலாய் உருவானவளே!
தொல்காப்பியன் கைகளில் இருதிணை
ஐம்பாலாய் உதித்திட்டவளே!

வேதங்கள் நான்கையும் தந்து உலகம் காத்திட வந்தவளே!

அறமாய்! மறமாய்! உரமாய்! சிரமாய்!

என்னுள் இருந்து இயக்குபவளே! இமயம் என திகழ்பவளே!

இவ்வுலகம் உள்ளவரை நீடுழி வாழ்க!

வளர்க இவ்வையகம் போற்றும் கன்னித்தமிழே!

கணித்தமிழே! என்றும் ஈடில்லை உன் பெருமை சொல்ல.....

முனைவர். சு. இந்திரா

தமிழ்த்துறைத் தலைவர்.

அன்னைத்தமிழ்

அன்பாய் இருஅகிலமும் உன்வசமாகும்
அதிகாரப்படுத்தாதே அடிமையாக்காதே
ஆணவப்படுத்தாதே யாரையும் அலட்சியப்படுத்தாதே
அத்தனைக்கும் ஆசைப்படு
இன்பமாய் வாழ இனிமையாய்செயல்படு
ஈதல்செய்ய ஈரநிலமாய் மாறிவிடு
உள்ளமும் உணர்வுகளும் ஒன்றுபடச் செய்
ஊக்கமோடு உழைத்தால்
உயர்வு காணலாம்
எண்ணத்தை ஏணியாக மாற்றினால்
ஏற்றம் நம்மை தேடிவரும்
ஏர்பிடித்தவன் கையும் ஏறுபிடித்தவன் கையும்
என்றும் நாட்டை உயரச்செய்யும்
ஒருமனதுடன் செயலாற்றுவோம்
ஒன்றிணைந்து பாடுபடுவோம் ஓதாமல்
யாவரும் இல்லா நாட்டை உருவாக்குவோம்.
ஔடதம் பேணி நலமுடன்
வாழக் கற்றுக் கொள்வோம்...

முனைவர். சு. இந்திரா
தமிழ்த்துறைத் தலைவர்.

என் சமுதாயமே!!

கலைகளும் பண்பாடும் நிறைந்தது என் சமுதாயம்!!!

ஓவியமும் காவியமும் பாரம்பரியமும் நிறைந்தது!!!

இலக்கணமும் இலக்கியம் தருவதும் எனது சமுதாயம்!!!

வீரத்திற்கு முதன்மைத் தந்த சமுதாயம்!!!

தத்துவங்கள் நிறைந்தது உழைப்பில் சிறந்தது!!!

கருணையின் இலக்கணமாய் திகழ்ந்து சிறப்பது!!!

சிற்பங்களும் கட்டிடங்களும் சிறந்து இருப்பது!!!

காலத்தால் அழிக்க இயலாத சமுதாயம்!!!

சித்தர்கள் நிறைந்தது நமது சமுதாயம்!!!

வேதங்களும் சித்த மருத்துவமும் நிறைந்தது!!!

கல்வியில் சிறந்தது கலைகள் நிறைந்தது!!!

தியாகமும் காதலும் நிறைந்த சமுதாயம்!!!

வான்புகழ் திருக்குறள் பெற்ற சமுதாயம்!!!

பேதங்கள் குறைந்தது நமது சமுதாயம்!!!

காதலில் கனிந்து நிற்கும் சமுதாயம்!!!

இமயத்தில் கொடி நாட்டிய சமுதாயம்!!!

பக்திப் பரவசத்தில் திளைக்கும் சமுதாயம்!!!

கோவில்கள் நிறைந்து அறம் சிறந்தது!!!

கற்பிற்கரசி கண்ணகி பிறந்த சமுதாயம்!!!

மகாக்கவியும் பாரதிதாசனும் பிறந்த சமுதாயம்!!!

கம்பனும் இளங்கோவும் வாழ்ந்த சமுதாயம்!!!

கங்கை காவிரி பாயும் சமுதாயம்!!!

சிந்தனையில் சிறந்தது முயற்சியில் உயர்ந்தது!!!

உலகம் போற்றும் தமிழ்ச் சமுதாயம்!!!!

முனைவர் பீ.ரகமத் பீபி

தமிழ்த்துறைப் பேராசிரியர்.

தமிழ் மொழியின் சிறப்பு

அண்டத்திலே சிறந்த மொழி, பல நாடுகளின்

ஆட்சி மொழி

இணைய தமிழாகவும் வளர்ந்த இன்ப மொழி

ஈனோர் போற்றும் மொழி

உவகை அளிக்கும் உன்னத மொழி

ஊன் உடம்பு தோறும் கலந்த மொழி

எக்கழுத்தம் (இறுமாப்பு) அளிக்கும் மொழி

ஏஎன்று போற்றும் மொழி

ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறு காப்பியம், ஐம்பொறி, ஐவகை ஒழுக்கம்

என பல சிறப்பு கொண்ட மொழி

ஒப்பனைக்குரிய ஒய்யாரமொழி

ஓங்கு புகழ் அடையச்செய்யும் மொழி

ஔடதமாக துன்பத்தைப் போக்கும் மொழி.

ந. ரேவதி

உதவிப் பேராசிரியை,

தமிழ்த்துறை.

இந்திய மாமேதை அப்துல்கலாம்

கனவு காணச் சொல்லி

கலைந்து சென்ற கலாமே!

இலக்குகளை வகுத்துக் கொடுத்து

இமைகளை நனைத்த கலாமே!

இரண்டே ஆடைகளில்

இந்தியாவை வலம் வந்தாய்!!

உன் பாத சுவடு படாத

பாரத மண் தான் ஏது?!!

இமயம் வியக்கின்றது!!

நீ இம்மண்ணில் பிறந்ததற்காக!!

கணக்கை முடித்ததாக எண்ணி

காலன் உன்னை கையில்

எடுத்துக் கொண்டானோ!!!

அவனுக்கும் தெரியாது!!

நீ என்றும் எங்கள் மனங்களில்

மலர்ந்திருப்பாய் என்று!!!

கல்வி சிந்தனையில்காமராசர் நீ!!

ஜாதி மதமற்றபகுத்தறிவில் பெரியார் நீ!!

அச்சமற்ற துணிவில் பாரதி நீ!!

தமிழை தரணி எங்கும்

தவழச் செய்ததில் வள்ளுவர் நீ!!

இளைஞர்களை திரட்டியதில் விவேகானந்தர் நீ!!

ராணுவ பங்களிப்பில் நேதாஜி நீ!!

அன்பினில் அன்னை தெரசா நீ!!

இத்தனை பேரும் உன்னுள் அடக்கம்!!

இந்தியாவே உன்னில் அடங்கும்!!!

மதங்களைக் கடந்த புனிதன் நீ!!

மனிதநேயத்தின் மணிமகுடம் நீ!!

வழிகாட்டுவதில் வாள்வேந்தன் நீ!!!

கடை கோடியில் பிறந்து

ஏழு கண்டங்களையும் காண வைத்தது நீ!!!

சிறகுகள் உதிர்ந்தது என்று சொல்லக்கூடும்?

நீ ஏற்றி வைத்த அக்னியில்

எங்கள் நெஞ்சம் கனன்று கொண்டிருக்கின்றது

உன் கனவுகளை!!

எங்கள் இதயத்தில் சுமப்போம்!!

இலக்குகளை வெல்வோம்!!

(பாரத ரத்னா, முன்னாள் குடியரசுத் தலைவர், டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் ஐயா அவர்களின் பொற்பாதத்திற்கு இக்கவிதை சமர்ப்பணம்)

க. சுமதி,

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை.

மகுடம் சூட்டிய மொழி

அணுவின் அனைத்திலும் அமிழ்தமாய்
என் அன்னை மொழியே!..
ஊனிலும் உணர்விலும் கலந்த உறவு மொழியே....!
உடுக்கையில் உதித்த உன்னத மொழியே!...
அகத்தியர் அடிப்படையில் அரும்பிய அருங்கலமே....!
தொல்காப்பியர் என்பவரைத் தமராக தந்த தொன்மொழியே!...
மூன்றால் முகிழ்ந்த முறுநகையே!....
நானிலம் நந்தவனமாய் எம் நற்றமிழே...!
எழுத்து என்னும் என்பு ஆகி
சொல் என்னும் சிரம் ஆகி
பொருள் என்னும் பிணைப்பு ஆகி
யாப்பு என்னும் யாக்கை ஆகி
அணி என்னும் அங்கயற்கண்ணி ஆகி
ஐந்திலக்கணத்தால்
ஆளும் அழகியே!....
இலக்கியத்தை இன்னமுதாய் இயம்பிய இறைவியே...!
பார்போற்றும் பைந்தமிழை கண்டு பிரம்மிக்கிறேன்...!
பிரம்மிப்பது பிறவி மட்டுமல்ல.... பிரபஞ்சமும் தான்.....!

சு.பூஜா
முதுகலை இரண்டாம் ஆண்டு
தமிழ் இலக்கியம்.

போற்றினேன் என் தமிழை!

உச்சமானதோடு உச்ச வீரத்தோடு ஆதிக்குடியொன்று

தன் நெஞ்சகத்தே இறையாம் தமிழை சிவமாம்.....

தமிழை தெய்வீகமாம் தமிழை ஆதிமூலம் தமிழை

யாதின் மூலமாம் தமிழைதன் ஜீவனாய் கொண்டு

தன் உயிராய் கொண்டு பெருவாழ்வு வாழ்ந்து வந்த...

நிலைத்த புகழோடு நித்திய வாழ்வு வாழ்ந்து வந்த நிலைத்த

புகழோடு நித்திய வாழ்வு வாழ்ந்து வந்த பெரும் !

பெருங்கண்டமானது புண்ணிய பூமியாம் அத்தமிழ்நாடானது

திரு இடம் எனவும் திருவிடம் எனவும் போற்றி வணங்கப்பட்டதாம்,

அப்புனித திருவிடமே மருவி,

இன்று திராவிடமும் ஆகிற்றாம் வணங்குகிறேன்...

என் திருவிடத்தை.. போற்றுகின்றேன் என் திராவிடத்தை...!

மூ.பாக்கியா

இரண்டாம் ஆண்டு

தமிழ் இலக்கியவியல்.

மொழி

அய்யன் வள்ளுவனால் சிறப்படைந்த மொழி

ஆகமம் பல வளர்த்த மொழி

இம்மை மறுமைப் பயனை வகுத்த மொழி

ஈதலின் சிறப்பை உணர்த்தும் மொழி

உள்ளம் நிறைந்த உண்மை பொருள் அடங்கிய மொழி

ஊர்மிமாலி (கடல்) போல் இருக்கும் மொழி

எல்லையில்லா பெருமைக்குரிய மொழி

ஏழை எளியோனும் எளிதில் கற்கும் மொழி

ஐந்திணை ஐம்பால் சிறப்பு விளக்கிய மொழி

ஒழுக்கத்தை உயர்வாக என்னும் மொழி

ஓர்மை (துணிவு)ஒருவருக்கு அளிக்கும் மொழி

ஔதசியம் (பால்) போன்ற தூய மொழி.

அதுவே என் தாய் மொழியாம் தமிழ் மொழி!

உ. சுமையா பானு

முதுகலை இரண்டாம் ஆண்டு

தமிழ் இலக்கியவியல்.

தாய் மொழியே !

அகரத்தில் தொடங்கி

ஆதியும் அந்தமுமாய் ஆகி

இன்பத்தமிழ் என்னும் சிறப்பு பெற்று

ஈகையாக இலக்கண இலக்கியங்களை வழங்கி

உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வகையில்

ஊன்றுகோலாய் அமைந்த மொழியே

எட்டாநிலையில்

ஏமம் அடைந்து

ஐயங்கள் பலவற்றை போக்கி

ஒய்யார மொழியாய்

ஓங்கு புகழ் அடைந்து மற்ற மொழிகள்

ஔவிக்கும் வண்ணம் அமைந்த தாய் மொழியே !

இனிய தாய்மொழி தின நல்வாழ்த்துக்கள்.

மா. ஆனந்தி

முதுகலை இரண்டாம் ஆண்டு

தமிழ் இலக்கியவியல்.

எம் மொழி

ஒரு காலமும் அழிக்க முடியாதது
எம் மொழி
அஃதே எம் தமிழ் மொழி
வாழிய தமிழ்.....
எங்கும் பறந்தது தமிழ்,
இல்லா எல்லா இடங்களிலும் ,அது
மலை போல.....
அது வானிலும், பூமியிலும்
நிலைத்தது,
தமிழே எம்மின் தாயின் பெருமை
அதில் காதல் ஒளிர்ந்தது.
மனிதன் சுவாசிக்க தொடங்கிய
அக்கணம்.....
முதல் சுவாச மொழியாக திகழும் முதுமொழி.....
தாய்க்கு தாயான செம்மொழி....
அதுவே உலக மொழிகளுக்கு உயிரூட்டியது
எம் தமிழ் மொழி.....
தமிழகத்தின் ஆட்சி மொழி
அதிகாரப்பூர்வ மொழி
மாநில அரசின் மொழி எமது தாய்மொழி.....
தமிழுக்காக தலைவணங்கும் என் சிரம்....
தமிழ் வளர என் உடல் ஆகட்டும் உரம்....
உயிர் நாவில் உருவான தமிழ் மொழியே!....

கோ இலக்கியா
இரண்டாம் ஆண்டு
தமிழ் இலக்கியவியல்.

தமிழ் மொழியே !

உலக மொழி

நம் செம்மொழியான

தமிழ் மொழியே!....

தமிழ் என் தாயின் பெருமையை

கொழிக்கும்

என் உள்ளத்தில் எப்பொழுதும்

தமிழ் தாயின் குரல் விரும்பும்....,

தமிழின் இசை,

நம் உயிரின் தசை.....

தமிழ் மொழி நமது உயிரின் உறவு,.....

கோ. இலக்கியா
இளங்கலை இரண்டாம் ஆண்டு
தமிழ் இலக்கியவியல்.

தாய்மொழி என் தமிழே !

தமிழ் என்னும் மொழி !

என் தாயின் கருவறையில் இருந்து பயின்ற மொழி !

அவை முதலில்.....

அம்மா

அப்பா

அக்கா

அண்ணா

மாமா

அத்தை

என்ற ஒவ்வொரு உறவுகளையும்

என் அழகிய மழலை குரலால் பேச வைத்தது

என் தாய் மொழியை தாய் என்ற

உன்னை வணங்குவதற்கு இரு கரங்களையும் கூப்பி

பெருமிதம் அடைகிறேன்.....

ப. பிருந்தா

முதுகலை முதலாமாண்டு

தமிழ் இலக்கியம்.

கல்விக்கண் திறந்த காமராஜர்

தமிழகத்திற்கு விருதுபட்டி தந்த விருது!

மக்கள் நலத் திட்டங்களில்களம் கண்ட எருது! –இவர்

குமாரசாமி சிவகாமியின் ! குலக்கதிரு!

தறுகண் இலாப்பெருவழுதி!

சிறார்களுக்கு கல்விக்கண் தந்த இந்த பாரதி!

யாண்டுகள் ஒன்பது தமிழகத்தை ஆண்ட காமாட்சி!

நேர்மை படிந்த சொல்லாட்சி!

தலைவரை உருவாக்கியதே அதன் சாட்சி!

மதிய உணவளித்த தாயுமானவர்! – உயர்

தொழில் சாலைகளுக்கு தந்தையுமானவர்! –வட

இந்தியாவில் கருப்பு காந்தியானவர்!

தமிழக சட்டசபையில் வரவுசெலவை தமிழில்

சமர்ப்பித்த முதல் தமிழனானவர்!

கண்டதில்லை நேரில் உங்களை

நீங்கள் செயல்படுத்திய திட்டங்கள்

பேர் சொல்லும் பிள்ளையாய் நிற்கிறது !

பணத்தொகை இலா பண்புத்தொகையானவர்!

உங்களை புகழ என்னிடம்

அன்மொழித்தொகை இல்லை.

வெண்கதர் அணிந்த பகலவன்

அந்த விருதுநகர் தந்த வேந்தன்.

இளைய தலைமுறைக்கு முன்மாதிரி .

அவர் செயல் கண்டு நம் நாட்டை வழிநடத்துவோம் புதுமாதிரி!

வாழ்க நின் புகழ் வளர்க உன் பணி என வணங்குகிறேன்.

பி.திவ்யா

உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை.

எம் தமிழ்

“எம் தமிழை
பருகாதவர் உண்டோ!
எம் தமிழை வாய்மொழியால்
வென்றியிராதவர் உண்டோ!
எம் தமிழை முப்பாலால் கடைந்துண்டோம்!
மொத்தத்தில் எம் தமிழுக்கு
எம் தாய்மொழியே நிகரே...!

அ. ரஞ்சிதா
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை.

அன்பு

அன்பை மறக்க
வைப்பது கோபம்
கோபத்தையே மறக்க வைப்பது அன்பு
தூய அன்பின் ஆழத்தில்
புதைந்து கிடக்கும் வேதனைகள்கூட அடங்கும்.....

மா. ஷர்மிளா
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்.

அன்பு மலர்களே !

ஆனந்த குறுங்கவிதைகளே!

இப்பூவுலகின் அதிசய ஆனந்த தோட்டமே!

உன்கைப்பட்டு தூக்கி எறியும் பொருள்களும்

உடைந்து பின்னே உயிர்பெறுகின்றதே!

அன்பதிகாரம் பேசும் மழையே!

திகட்டாத தேன் சிந்தும் மழலையே!

தமிழ் நடைபயிலும் மாணிக்கத்தேரே!

வருங்கால இந்தியாவின் எதிர்காலமே!

விழுந்தாலும் எழுவேன் என்பதை உன்நடையில் பயில்

புன்னகையோ உன்னை புதுப்பிக்கும் 'Boost up'

ஆணவம் இல்லா உள்ளத்திற்கு மூத்தோர் சொற்களே

Antivirus மாறும் காலத்திற்கு Update Version ல் மாற்று உன்உலகத்தை!

எதிர்கால உலகம் Computer world நீயும் மாறு எதிலும் Bold..

உன் மாற்றங்கள் தருமே உனக்கு எதிலும் Gold..

அன்பு மலர்களே! ஆனந்த குறுங்கவிதையே!

அழகான உலகை அன்பால் உருவாக்குவோம்!

வாருங்கள் ! வாருங்கள்!

ரா. ஐஸ்வர்யா

உதவிப்பேராசிரியர்

தமிழ்த்துறை.

ஆடி பதினெட்டு

ஆடி பதினெட்டாம் பெருக்கு!

ஓடிவரும் நதிமகளுக்கு புண்ணிய நீராட்டு!

நாடு செழிக்க வரும் நதி மகளுக்கு காப்பரிசிட்டு,

காதோலை கருகமணி பூட்டி,

பூச்சூட்டி, பெருக்கெடுத்து வருகவென வணங்குவோம்!

நீர் இன்றியமையா உலகு

எனும் வள்ளுவன் வாக்கிற்கிணங்க

கடலில் கலக்கும் நதியை

நிலத்திடை பதுக்கி வைப்போம்!

வான் வறண்ட காலத்திற்கு புதையலென இறைத்தெடுப்போம்!

பொன்னும் நீரும் ஒன்றென வருங்கால

தலைமுறைக்கு சொல்லி வைப்போம்!

இக்கணத்தில் அவசியம்

நீர் சிக்கனமென செவியறிவுறுத்துவோம்!

அன்பும் சரி நீரும் சரி

கொடுத்தால் இரட்டிப்பாகுமென இன்றைய

தலைமுறைக்கு சொல்லி வைப்போம்!

ஆடிப் பட்டமளிப்பு விழாவில் விதைகளை

விதைக்கும் தலைமை விருந்தினனாய்.....

இளவட்டதினரை பரிவட்டம் கட்டி அழைப்போம்!

ஓடி வரும் ஆடி பதினெட்டை

ஆடி விளையாடி வரும் சிறார்களுடன் கொண்டாடுவோம்

தமிழரின் பண்பாட்டை தலைமுறையிடம் பதிவுயமிட்டு செல்வோம்

மு.கலைச்செல்வி

உதவிப்பேராசிரியர்

தமிழ்த்துறை.

உழைப்பின் குரல் !

பதவியின் பகட்டை
இருப்பிடம் சொல்லும்.
ஆட்சியின் அருமையை
அரசவை சொல்லும்.
சுயநலங்களின் சூழ்ச்சியே - இன்று
செய்முறைகளை
செயல்முறைகளாக மாற்றிக் கொண்டனர்.
எப்படி வேண்டுமானாலும் போகட்டும்
வரட்டுப் பதவியால்
வறட்டும் கௌரவம்.
நீதி கேட்காதீர்!
ஏனென்றால்?
ஆட்சி புரியும் விதம்
பாரதம் - இராமாயணம்
இரண்டிலும் உண்டு.
கிரீடத்தை யார் சுமப்பது?
கோவலன் தப்பினதால்தான்
கொலைசெய்யப்பட்டானோ?
அரசாங்கம், தனியார்-
இரண்டிலும் உள்ளதாமே?
சிலகுமுறல்கள் கேட்கிறோம்.

எங்களிடம்,

போட்டியிட ஆளே இல்லையே!

கிடைக்காத இடத்திற்கு

ஆயிரமாயிரம் போட்டிகள் - ஏன்?

நாங்கள் தருகிறோம்!

கிரீடம்..

இலவசமாக!

வாருங்கள் ...

இந்த கிரீடத்தை வாங்க.

சுமந்து சுமந்து...

உச்சு வெளுத்துப் போச்சு.

நரை முடித்து

வேடமணிந்த சொல்ல

சோழர்கள் அல்ல.- நாங்கள்

உண்மையில் கூறுகிறோம்.

மூன்றுகாலில் நடக்கும்

காலம் வந்துவிட்டது.

அதனால் தருகிறோம்.

கிரீடம் இலவசம்.

வாங்கிக் கொள்ளுங்களேன்.

போதாதா?

பட்டங்களும் தருகிறோம்.

பதறவேண்டாம் வாருங்களேன்.

பட்டப்படிப்பு கூட தினந்தோறும் நடக்கும்

எங்கள் பல்கலைக்கழகத்தில்.

விடுமுறை ஒன்று

இல்லவே இல்லை.

கல்வி கட்டணமேதும் இல்லை

விண்ணப்பங்களும் போடவேண்டாம்.

வீடுதேடி அழைத்துச் செல்வோம்.

வருத்தப்படாதீர்!

வரிசையாக வாருங்கள்.

ஆண், பெண் மூன்றாம் பாலினத்தாருக்கும்

அனுமதியுண்டு.

நீங்கள்

கற்றுக்கொள்ளும் கருவிகளையும்

இலவசமாக தருகிறோம்.

மூன்றுவேலை உணவும் கிடைக்கும்,

செயல்முறைக்கான தொகையும்

கிடைக்கும்.

ஆச்சர்யமா உங்களுக்கு?

சத்தியமாக தந்திடுவோம!"

எங்கள்

சும்மாடு கிரீடத்துடன்

தினக்கூலி பட்டத்தை

உழைப்பாளி பல்கலைக்கழகம்

உடனே தருகிறது.

என்னபார்வை?

சும்மாடு சுமப்பது

சும்மா இல்லை.

கூப்பாடுபோடும்

உங்களுக்கு தெரியுமா?

எங்களின் சும்மடிப்பதவி

காலவரையரை இல்லாதது.

காலன் வரும்வரை கௌரவம் தருவது.

முனைவர் ஸ்ரீ. அழகுலெட்சுமி

உதவிப்பேராசிரியர்

தமிழ்த்துறை.

ஏழைகளின் புன்னகை

ரோஜா பூக்களை

வாங்கினால்

புன்னகை இலவசம் என்கிறாள்

இந்த இளைய

ரோஜா தேவதை!

உன் கள்ளமறியாப்

புன்னகைக்காக

இந்த பூக்களை

வாங்கிக் கொள்ள

சம்மதித்தேன்

புன்னகை செய்தது

முள்ளில்லாத ரோஜா முத்தான ரோஜா!!!!!

க. புஷ்பா

உதவிப் பேராசிரியர்

தமிழ்த்துறை.

சித்திரை விழியாள்

சித்திரத்தின் சித்திரையாள்!
பங்குனி பகலவன் மறைந்து பாவையே!
புதிதாய் பிறந்தாய்.....
உச்சியில் உதித்த
உம் கரங்களான
கதிர்கள் பட்டது! சுட்டது!
வல்லினம் மெல்லினம்இடையினம் என்னும்
எம் தமிழினத்தை ஆள்கிறாய்
விளக்கின் விழியாள்! தமிழின் மொழியாள்!
அவதாரங்கள் அரும்பும் அனலை உடைய அன்னையே!
பெண்ணே! மயில் தோகையாய்
உன் தோற்றம்
உழன்று இருக்கும் உலகத்தின் மாற்றம்.....
சிற்பமான சித்திரை பொலிவானது
உன் பெருமை
அளவில்லா அரும்பிய வெயிலால்
அறிந்தேன் நிழலின் அருமை
பூலோகம் பிரம்மிக்கும் பிறப்பு விழாவுக்கான வரவேற்பு....!

கி. நிஷாபாரதி
முதுகலை இரண்டாமாண்டு
தமிழிலக்கியம்.

எதிர்காலம்

உனக்கு என்ன என்ன தோன்றுகிறதோ.....
அதுதான் உன் வாழ்க்கை தீர்மானிக்கும் !
உனது எதிர்காலத்தை நீயே உருவாக்கு ....
நீ பட்டதுன்பத்தைவிட அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது !

சௌ. மாலா
முதலாம் ஆண்டு
தமிழ் இலக்கியவியல்.

கல்வி

கல்வி என்னும் சாலை அமைத்து
இதிகாசம் என்னும்
காவியங்களை படைப்போம்!
கல்விச்சாலையின்
கனவுகளை காவியமாக மாற்று
வாழ்க்கை சிறப்படையும்!
வாழ்க்கை சிறப்படைய வாழ்த்துக்கள்!

கோ. ஜானகி
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்.

தமிழ் மொழி !

அமுத மொழி!

ஆதி மொழி!

இனிமை மொழி!

ஈகை மொழி!

உயிர் மொழி!

ஊடக மொழி!

எழில் மொழி!

ஏற்றம் தரும் மொழி!

ஐயம் திரிபற்ற மொழி!

ஒற்றுமை தரும் மொழி!

ஓசை நிறைந்த மொழி!

ஔவை முருகனுக்கு!

அருளிய மொழி!

எம் தமிழ் மொழி!

கு. நிவேதா

தமிழ்த்துறை

உதவிப்பேராசிரியர்

பொன் மொழிகள்

★ வாழ்க்கை என்பது சந்திரன் மாதிரி சில சமயம் இருட்டு சில சமயம் முழு நிலவு

★ மனித அன்பின் பிறப்பிடம் – தாய்

★ உணவுக்கு உப்பு எப்படியோ அப்படியே பேச்சுக்கு பழமொழி

★ நீ பழக்கப்பட்டு விட்டால் தீமை கூட நன்மையாக தெரியும்

★ உற்ற நண்பன் உயிருக்கு அமுதம்

★ அன்னைக்கு உதவாதவன் யாருக்கு உதவுவான்

★ தாயின் இதயம் குழந்தையின் பள்ளிக்கூடம்

★ மனிதனுக்கு மரியாதை அவசியம் மலருக்கு நறுமணம் அவசியம்

★ தமிழுக்கு இருவர் தத்துவத்திற்கு ஒருவர்

★ அதிகம் பேசுகிறவன் முழு மனதுடன் செயலில் ஈடுபட மாட்டான்

★ நாளை விடிந்தால் நடக்கும் கதை யாருக்கும் தெரியாது

★ சோம்பல் என்பது மரணத்தின் உறக்கம்

★ இரண்டு மொழிகள் தெரிந்த ஒரு மனிதன் இரண்டு மனிதர்களுக்கு சமம்.

★ மகிழ்ச்சி ஒரு மனிதனின் பலத்தில் பாதி

★ ஏழைகள் இதயத்தால் உபசரிக்கிறார்கள்.

ரா. பூவரசி
இளங்கலை முதலாம் ஆண்டு
தமிழ் இலக்கியம்

- கப்பலே கவிழ்ந்தாலும் கன்னத்திலே கை வைக்காதே!

  உண்மையான விளக்கம்:

  கப்பலே கவிழ்ந்தாலும் கண்ணை கோளில் கை வைக்காதே திருடக்கூடாது என்ற பொருளை குறிக்கிறது.

- நல்ல மாட்டுக்கு ஒரு சூடு!

  உண்மையான விளக்கம்:

  நல்ல மாட்டுக்கு ஒரு சுவடு

- குருவிக்கு தக்கென ராமேஸ்வரம்!

  உண்மையான விளக்கம்:

  குறி வைக்க தப்பாது ராமசரம்

- சோழியன் குடுமி சும்மா ஆடாது!

  உண்மையான விளக்கம்:

  தோழியன் குடுமி சும்மாடு ஆகாது.

- கல்லக் கண்டா நாயை காணும் நாய கண்டா கல்ல காணோம்!

  உண்மையான விளக்கம்:

  கல்லைக் கண்டால் நாயகனை காணும் நாயகனை கண்டால் கல்லை காணும்!

- அடி உதவுவது போல் அண்ணன் தம்பிகூட உதவ மாட்டான்!

  உண்மையான விளக்கம்:

  அடி என்பது நிலத்தில் உழைப்பதற்காக வைக்கும் அடி

- அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்!

  உண்மையான விளக்கம்:

  அற்ப்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியிலும் கொடை பிடிப்பான்.

- கழுதைக்கு தெரியுமா? கற்பூர வாசனை!

  உண்மையான விளக்கம்:

  கழு தைக்க தெரியுமா கற்பூர வாசனை.

- மாமியார் உடைச்சா மண் குடம் மருமகள் உடைச்சா பொன்குடம்!

  உண்மையான விளக்கம்:

  மாமியார் உழைத்தால் மண்ணுக்கு உரம் மருமகள் உழைத்தால் பொன்னுக்கு உரம்.

- கண்டதை கற்றால் பண்டிதன் ஆவான்!

  உண்மையான விளக்கம்:

  கண்டு அதனை கற்றால் பண்டிதன் ஆவான்!

- களவும் கத்து மற!

  உண்மையான விளக்கம்:

  களவும் கத்தும் மற!

- பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது!

  உண்மையான விளக்கம்:

  புதன் என்னும் கிரகத்தை குறிக்கிறது.

இரா. சுஜாதா

முதுகலை இரண்டாம் ஆண்டு

தமிழ் இலக்கியவியல்.

நகைச்சுவை துணுக்குகள்

- காபியை விட டீ தான் நல்லது ஏன் தெரியுமா?
  ஏன்னா காபில ரெண்டு ஈ இருக்கு ஆனா டீல ஒரு ஈ தான் இருக்கு.

- கொசுவுக்கு தன்னம்பிக்கை அதிகம்! ஏன் தெரியுமா?
  ஏன்னா அது எங்க போனாலும் எல்லாரும் கைதட்டி கிட்டு இருப்பாங்களே!

- சின் சான் அவன் போன்ல இருந்து ஒரு நம்பருக்கு கால் பண்ணலாம் ஆனா கால் போகவே இல்ல ஏன்?

  ஒரு நம்பருக்கு கால் பண்ணா எப்படி!!! பத்து நம்பருக்கு கால் பண்ணா தானே போகும்.

- ஆபத்தான சிட்டி எது?
  எலக்ட்ரிசிட்டி.

- மகாராஜாவோட மனைவி காத்து அடிச்சா பறந்து போயிடுவாங்களாம்!!
  ஏன்னா. அவங்க தான் பட்டத்து ராணி ஆச்சே!

- டன் கணக்கில் துணி துவைக்கும் இடம் எது?
  வாஷிங்டன்.

- ஒருத்தன் தலையில் இருந்து 'இலையா' கொட்டுச்சாம் ஏன்?
  ஏன்னா அவன் மரமண்டையாம்.

- எல்லா பிரியாணிக்கும் டெஸ்ட் வச்சா எந்த பிரியாணி பெயில் ஆகும்?
  முட்டை பிரியாணி தான்!

- கோவிலுக்கும், சாமிக்கும் அப்படி என்ன வித்தியாசம்?

  கோவில் சிம்பு நடித்த படம்

  சாமி விக்ரம் நடித்த படம்.

- அப்பா –டேய் கார்த்தி என்னடா எல்லா எக்ஸாம்லயும் ஜீரோவா எடுத்து இருக்க?

  கார்த்தி –எங்க மிஸ் தாம்பா கணக்குல ஜீரோக்கு தான் அதிக மதிப்பு னு சொன்னாங்க!

இரா. சுஜாதா

முதுகலை இரண்டாம் ஆண்டு தமிழ்.

படித்ததில் பிடித்தது !!!

சொல் எனும் கல் உங்கள்
மன குளத்தில் விழுந்து
சலனங்கள் உருவாகலாம்.
பதட்டம், கோபம், கவலை,
தடுமாற்றம் என உணர்வுகள்மேல் எழும்பலாம்.
ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள்
எந்த விதமான கடுமையான
சூழ்நிலை வந்தாலும்
சலனமே இல்லாத உள் தன்மையை
நீங்கள் பெற வேண்டும் என்றால்
தொடர்ந்து உங்கள் மனத்தை
நீங்கள் கவனித்துக் கொண்டே இருங்கள்.

முனைவர் சு. இந்திரா
தமிழ்த்துறைத் தலைவர்.

நத்தையையும் ஆமையையும் பார்த்து
கற்றுக் கொள்ளுங்கள்...
பிறக்கும்போதே முதுகின் பின் சுமை உண்டு...
ஆனால்
நாம் நகர்ந்து கொண்டே
இருக்க வேண்டும்.....

நா. உமாராணி
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்.

சங்க இலக்கியத்தை அகம் புறம்
என அழகாக வகுத்தளித்து
வாழ்க்கை கண்ணாடிக்கு வளமான
நெறிமுறைகளை புகட்டும் உயிரான
உலகம் மொழியை நம் தாய்மொழி.....

தி. மணிமேகலை
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்.

உலகில் முடியாதது ஏதுமில்லை.
ஏனெனில்... "முடி"யாது
என்பதிலேயே "முடி"
என்னும் வார்த்தை தான் முதலில் வருகிறது...!!!

கோ.ஜானகி
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்

எவ்வளவோ முயற்சி செய்து விட்டோம்
இனி உங்கள் மனைவியை காப்பாற்ற முடியாது
என்றனர் மருத்துவர்கள்
நான் பசியில் இருக்கிறேன் என்று கூறுங்கள்
என் அம்மா எழுந்து விடுவார் என்றான் 7 வயது மகன்..

அ.ரஞ்சிதா
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்.

நெற்றி பொட்டு மட்டுமல்ல,

நேர்கொண்ட பார்வையால்

என் முண்டாசு கவியின் கண்களும் சிவப்புதான்!

மீசைக் கவிஞன் பேச்சு!

ஆசை கொள்ளவில்லை

ஆச்சரியம் கொள்ள வைக்கும் அவன் உரைவீச்சு!

ஆம்! உதிரும் இலை கூட உன்னிடம்

கதை பேசும் துளிரும் துளிர் கூட உன்னிடம்

கவி பாடும் விழும்போது விதையாய் விழு

எழும்போது விருட்சமாய் எழு!

முனைவர் ஸ்ரீ. அழகுலெட்சுமி

தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்.

ஒரு பக்க சிறுகதைகள்

அப்பாவின் வாசம்

ஒரு கிராமத்தில் தாரா என்னும் பெண் தனது தந்தை தாயுடன் வசித்து வருகிறாள். அவளுடைய ஐந்தாவது வயதில் ஒரு விபத்தில் தனது தந்தையை இழக்கிறாள், தாயும் கை கால் செயலிழந்து படுத்த படுக்கையாக பக்கவாதம் ஏற்பட்டு இருக்கின்றார். தாரா தனது அம்மாவையும் பார்த்துக்கொண்டு தனது படிப்பையும் பார்த்துக் கொள்கிறாள். தனது தாய்க்கு தேவையான அனைத்து பணிவிடைகளையும் செய்கிறாள். அவ்வாறு செய்தும் அவளுடைய தாய் அவளை திட்டிக்கொண்டே இருக்கிறார். அவள் தனது தாய்திட்டுவது எண்ணி மிகவும் மனம் புண்பட்டு கிணத்தடிக்கு சென்று அமர்கிறாள். அப்பொழுது எதிரே ஒரு சிறு குழந்தை அவளுடைய தந்தையுடன் விளையாடிக் கொண்டிருக்கிறது. அதை கண்டவுடன் தனது தந்தை எண்ணி மிகவும் வருத்தப்படுகிறாள். திடீரென்று தந்தையின் வாசம் வீசுவது போன்று அவளுக்கு தோன்றுகிறது. தந்தை இருப்பது போன்று உணர்கிறாள். உடனே சென்று தன் தாயை காண்கிறாள் அங்கே அவளுடைய தாயின் உயிர் பிரிந்து இருக்கிறது. தனது மகள் மனம் புண்படுவதை கண்டு அவருடைய தந்தை விண்ணுலகத்திலிருந்து அவளுடைய சந்தோஷத்திற்காக அவளை துன்பத்தில் இருந்து விடுவிக்க அவளுடைய தாயை அவருடனே கூட்டிச் செல்கிறார். இதனை கண்ட மகளின் நெஞ்சம் கலங்குகிறது தன்னுடைய தந்தையின் அன்பை எண்ணி நெகிழ்ச்சி அடைகிறது.

கோ. பூஜா
முதுகலை இரண்டாமாண்டு
தமிழிலக்கியவியல்.

நிழல் நிஜமானது !

கனவும் கற்பனையுமே நிறைந்த ஒரு பெண்ணின் மனது. வாழ்க்கையில் தனக்கென்று ஒரு அடையாளத்தை தேடிய அவளது பயணம், வெறும் கனவிலும் கற்பனையிலும் மட்டுமே சாத்தியமாக இருந்தது. அது நிறைவேறாமல் போக அவளது சோம்பேறித்தனமும், குழப்பமும், நிலையான ஈடுபாடும் இல்லாமல் இருப்பது தான். திடீரென்று ஒரு நாள் அவளது கனவு கைக்கு எட்டும் தொலைவில் இருந்தது. அப்பாதையில் ஒரு கை அவளை கொண்டு சென்றது. நிழலாக இருக்குமோ என்ற பிரம்மையில் சென்று கொண்டிருந்தால் வெளிச்சத்தை நோக்கி அப்பெண். தன் நண்பனின் வெற்றியை தன் வெற்றியாக கருத்தில் கொண்ட பல தேவதைகளை அப்பெண் சந்தித்தால். முதல் அடியிலேயே சிறு தடுமாற்றம் இருந்தாலும், நிழலின் அரவணைப்பில் இருந்து, பல தடைகளை தாண்டி, பெரிய கனவிற்கான சிறிய அடியில் வெற்றி அடைந்தால் அப்பெண். நிழல் என்று எண்ணியவளுக்கு, நிஜம் அளித்த பதில் என்றைக்கும் நான் உன் நிழலாய் உன் கனவுகளைப் பின் தொடர்வேன், அது நிஜமாகும் வரை. இம்மாதிரியான நிழலைத் தக்க வைத்துக் கொள்ளுங்கள்,நிஜமாகும் கனவுகள் யாவும் நெடுந்தூரம் இல்லை.

“நிலையில்லா உலகில்
நிழல் என்று காக்கும் உறவுகளுக்கு
நிழலாக நீங்களும் இருங்கள், அவர்களது
நிழல்களும் நிஜமாகும் வரை”

சு. கௌசகி
முதுகலை இரண்டாம் ஆண்டு
தமிழ் இலக்கியவியல்.

தன்னம்பிக்கை

முருகன் என்பவர் தன்னம்பிக்கையை நம்பாமல் அதிர்ஷ்டத்தை மட்டும் நம்புபவர். ஒரு நாள் அவர் தெருவில் நடந்து கொண்டு வந்திருக்கும் போது சுவரில் ஒட்டி இருக்கும் ஒரு காகிதத்தை பார்த்தார் அதில், இது அதிர்ஷ்டசாலிகளுக்கான போட்டி என்று எழுதி இருந்தது. அதைப் பார்த்த உடனே அவருக்கு பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டதும். அவர் தமக்காகவே இந்த போட்டி நடத்தப்படுகின்றது, என்பது போல பெரும் கர்வத்தில் இருந்தார்.இதைப் பார்த்த மகிழ்ச்சியிலே வீட்டுக்கு திரும்பினார். வீட்டிற்கு வந்து பார்த்தால் அவரின் தோழன் வேலன் வந்திருந்தார். அவர் முருகனைபோல் இல்லாமல் தன்னம்பிக்கையை நம்புபவராக இருந்தார். முருகன் வரும் வழியில் தன் கண்ட காட்சியினை பற்றி மகிழ்ச்சியாக வேலனிடம் கூறினான். அதனைக் கேட்ட வேலன் எந்த ஒரு அதிஷ்டமும் தன்னம்பிக்கையோடு வேலை செய்தால் மட்டுமே அவ்வதிஷ்டமானது கிட்டும் என்று கூறினான். அவனுக்கு பாடம் கற்பிக்க வேண்டும் என்று எண்ணிய வேலன் ஒரு முடிவு செய்தான். வேலன் கூறினான்.நண்பா இன்றைக்கு எங்கள் வீட்டில் என் குழந்தைக்கு பிறந்தநாள் விழா நடைபெற உள்ளது அதற்கு கட்டாயம் நீ வரவேண்டும் என்று கூறினான். உடனே முருகனும், சரி நான் வருகிறேன் என்று கூறினான். விழாவிற்கு வந்த முருகன் ஒரு புறமாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அவனைப் பார்த்து சிரித்தபடி வேலன் நண்பா இங்கு ஒரு போட்டி நடக்கவிருக்கிறது. அதில் வெற்றி பெறுபவருக்கு 3 ஆயிரம் பரிசு வழங்கப்படும் என்று கூறினான். இதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்த முருகன் அப்போது அந்த போட்டியில் நானும் கட்டாயம் கலந்து கொள்வேன் ஏனெனில் நான் தான் அதிர்ஷ்டசாலியாயிற்றே என்று கூறினான். இங்கு இருக்கும் இந்த பெரிய கல்லை சுமந்து கொண்டு இரண்டு கிலோமீட்டர் நடந்து செல்ல வேண்டும் அப்படி நடந்து சென்றால் அவரை இந்த போட்டியின்

வெற்றியாளர் என கூறினான். அதற்கு முருகன் இரண்டு கிலோமீட்டர் தானே என்னால் முடியும் ஏனெனில் நான்தான் அதிர்ஷ்டசாலியாயிற்றே என்று கூறிக்கொண்டு அந்தக் கல்லை தூக்கினான் ஆனால் அவனால் அதை அசைக்கக்கூட முடியவில்லை இருப்பினும் மற்றவர்களிடம் முடியும் என்று சொல்லிவிட்டேனே என்ன செய்வதென்று முழித்துக் கொண்டு அக்கல்லை தூக்க முயன்றான். அதைப் பார்த்துக் கொண்டிருந்த வேலன், என்னப்பா முருகா நீ எவ்வளவு பெரிய அதிர்ஷ்டசாலி உனக்கு தான் நம்பிக்கை இல்லை என்றாலும் அதிர்ஷ்டம் கை கிட்டுமே அப்படி இருந்தும் நீயே கல்லை தூக்க முடியவில்லை என்றான். மேலும் கீழும் பார்த்த முருகன் ஒரு நிமிடம் யோசித்துப் பார்த்தான். அவன் தன்னைப் பார்த்து இப்படி ஒரு கேள்வி கேட்டு விட்டான் என்று எண்ணி தன்னால் இந்தக் கல்லை தூக்க முடியும் என்று தன்னம்பிக்கையோடு அதை தூக்கினான் தூக்கிக் கொண்டு நடக்கவும் ஆரம்பித்தான். அதை முடித்துவிட்டு ஏளனமாக சிரித்தபடி வேலனை பார்த்தான். அப்பொழுது வேலனும் முருகனைப் பார்த்து சிரித்தபடி நண்பா உனக்கு இப்போது அந்த அதிர்ஷ்டம் கை கொடுக்கவில்லை உன்னுடைய தன்னம்பிக்கை மட்டும் தான் கை கொடுத்தது ஆகையால் எப்போதும் தன்னம்பிக்கை அனைத்தையும் விட உயர்ந்தது என்று தெரிந்து கொள் என்று அவனுக்கு கூறினான். அதைக் கேட்க முருகன் அதிர்ஷ்டம் என்பது ஏதோ ஒருமுறை தான் வந்து போகும் ஆனால் தன்னம்பிக்கை என்பது நம்மிடமே தான் இருக்கிறது அதை நம்மால் மட்டுமே தட்டி எழுப்ப முடியும் என்று அவன் உணர்ந்து கொண்டான். இக்கதையானது தன்னம்பிக்கை மட்டுமே நம் வாழ்வில் சிறந்த நம்பிக்கை என்பதை உணர்த்துகிறது தன்னம்பிக்கை தனித்துவமான வாழ்க்கையை வாழ்வதற்கு ஒரு சிறந்த வழியாகும்.

கா. யமுனா ஸ்ரீ
இளங்கலை மூன்றாம் ஆண்டு
தமிழ் இலக்கியவியல்.

தமிழ் பேச்சு உயிர் மூச்சு

காட்டு மல்லி என்னும் ஒரு கிராமத்தில் ராதா என்னும் பெண் வாழ்ந்து வருபவள் திருமணமான இரண்டே வருடங்களில் தன் கணவனை இழந்ததால் கணவன் இறக்க தன் ஒன்றரை வயது ஆண் குழந்தை கிடைத்த வேலை செய்து வந்து தன் மகனை உயர் படிப்பையும் படிக்க வைத்தாள் ராதாவின் மகனான முகில் வேந்தன் ஐகூ கம்பெனியில் வேலை செய்ய வேண்டும் என்று எண்ணி அமெரிக்காவில் வேலை செய்ய வேண்டும் என்றும் அவனின் தாய் மொழியான தமிழ் மொழியை அடியோடு வெறுப்பவன் முகில் வேந்தன் ஆங்கில மொழியை உயர்வானது என்று நினைப்பவன் அமெரிக்காவிற்கு சென்று ஐடி கம்பெனியில் வேலை செய்து வந்தான். அப்போது அவ்விடத்தில் ஹெலன் என்னும் ஆங்கிலப் பெண் வேலை செய்து வருகிறான். ஹெலனுக்கும் உயிர்வேந்தன் தமிழ் பயன் என்றால் அவளுக்கு அவனை மிகவும் பிடித்தது இருவருக்கும் இடையே காதல் மலர்ந்தது இருவரும் உறவினர்கள் நண்பர்கள் தாயிடம் யாருக்கும் தெரியாமல் முகில் வேந்தன் திருமணம் செய்து கொண்டான் திருமணம் செய்து சில நாட்களுக்கு பின்னாடி தாயிடம் கூறினான் மகிழ்ச்சி அடைந்ததால் எவ்விதமான வருத்தமும் கொள்ளவில்லை முகில் வேந்தன் தன் மனைவிகளுடன் விடுமுறை நாட்களில் தான் சொந்த ஊரான காட்டுமல்லி என்னும் ஊருக்கு அழைத்துச் சென்றான் ராதாவிற்கு ஹெலனை மிகவும் பிடித்திருந்தது இருவரும் ஒற்றுமையோடு இருந்தார்கள். ஹெலன் தமிழ் மீது அதிக பற்று கொண்டவள் இவள் பட்டிமன்றம் கவிதை போன்ற நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டால் மற்றும் தமிழ் பெருமைகளை அனைத்து இடங்களிலும் பெருக்கினால் சில மாதங்களில் தன் கணவன் நலனை அமெரிக்காவிற்கு அழைத்தான் அழைத்த போது அமெரிக்காவிற்கு வர மறுத்தால் பின்பு வேந்தன் அவளிடம் தமிழ்

என்ற ஒரு மொழியை யாரும் மதிக்க மாட்டார்கள் அமெரிக்காவிற்கு சென்றால் வேலையைப் பார்த்துக் கொண்டு முன்னேறலாம். ஆனால் இவற்றை நம்பினால் நீ யார் என்று உனக்கே தெரியாமல் போய்விடும் என்றான் முகில் வேந்தன் அவற்றை எதுவும் இருக்கவில்லை தமிழ் மொழியைப் பற்றி பெருமொழியுடன் கணவனிடம் பேசினால் அவனும் அமெரிக்காவிற்கு சென்றேன். ஹலோ சிறந்த பேச்சாளராக அனைவரும் வியக்கும்படி விளங்கினால் இரண்டு வருடங்கள் கழித்து கணவன் மீண்டும் வரவை அப்போது சிறந்த பேச்சாளராக இருந்தால் ஒரு பள்ளியில் விருந்தினராக கலை நிகழ்ச்சிகள் கலந்து கொள்ள வேண்டும் என்றனர் அப்போது தன் கணவனையும் அழைத்துச் சென்றேன் தன் மனைவியின் பேச்சை பள்ளியில் கேட்டு மெய்சிலிர்த்தான் இப்படிப்பட்ட தாய்மொழி என தமிழ் மொழியை இழிவாக பேசியதற்காக மிகவும் வருத்தம் அடைந்தான் பின்பு தாய் மொழியை உயிர்மூச்சாக கொள்ள வேண்டும் என்று அப்போதுதான் உணர்ந்தான்.

த. ஆஷா,
முதுகலை இரண்டாம் ஆண்டு,
தமிழ் இலக்கியம்.

கட்டுரைக் களம்

தாய்மொழி

முன்னுரை

தமிழ் மொழியின் பெருமை தமிழ்நாட்டில் மட்டுமின்றி பல நாடுகளில் பரவி வருகிறது. மற்ற மொழிகள் எல்லாம் பேசுவதற்கு மட்டுமே பயன்படுகின்றன. ஆனால் தமிழ் மொழி மட்டுமே ஒருவன் வாழ்வை எவ்வாறு வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது முச்சங்கம் வைத்து வெற்றி கண்ட சிறப்பை பெற்ற மொழி எம்தமிழ் மொழி. அந்த வகையில் அதன் சிறப்புகளை சிறிது ஆழ்ந்து பார்ப்போம்.

மொழி தோன்றிய வரலாறு

மொழியின் தோற்றம் பற்றிய ஆய்வு நிகழ்ந்து கொண்டே தான் இருக்கிறது. மனித இனம் ஒரே மொழியை பேசியதாகவும் கடவுள் அதனை பழமொழிகளாக சிதைத்ததாகவும் கிறித்துவ திருமுறை கூறுகிறது. சிவபெருமானின் உடுக்கையில் இருந்து வட மொழியும், தென்மொழியும், தோன்றியது என்று நாம் கூறுகிறோம் இப்படி ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு வரலாறு உண்டு.

“கல் தோன்றி மண் தோன்றா காலத்தின்
முன் தோன்றிய மூத்த மொழி”

என்று நம் இலக்கணம் கூறுகிறது. மொழிகளுக்கெல்லாம் முதலில் தோன்றிய மொழி நம் மூத்த மொழியான தமிழ் மொழி என்பதை உறுதிப்படுத்துகிறது.

வரலாற்றுச் சான்றுகள்

ஒரு நாட்டின் வரலாற்றிற்கும், மொழியின் வரலாற்றிற்கும் சான்றாக விளங்குவது இலக்கியங்களே. அந்தந்த காலத்தில் தோன்றிய இலக்கியத்தை வைத்து அந்த கால மொழியை பற்றி அறிய முடிகிறது. கல்வெட்டுகள், சாசனங்கள், செப்பேடுகள் மொழி வரலாற்றிற்கு பெரிதும் துணை புரிகின்றன. இலங்கையில் கிடைத்த சிங்கள மொழி கல்வெட்டில், தமிழ் பெயர்களும், தமிழ் சொற்களும் ஏராளம் காணப்படுகின்றன. இந்தக் கல்வெட்டுகள் மூலம் நம் தமிழர்கள் எவ்வாறு வாழ்ந்துள்ளனர் என்பதனை அறியலாம். இலக்கியத்தைப் போலவே இலக்கணமும் மொழியின் வரலாற்றுக்கு பெரிதும் உதவுகிறது. இலக்கணம் நேரடியாக மொழியின் இயல்பை உணர்த்துகிறது. கல்வெட்டுகள் மூலம் நம் மொழியின் வளர்ச்சியையும், பேச்சு மொழியின் சாயலையும் காணலாம்.

தமிழை வளர்த்த அறிஞர்கள்

மொழியில் எழுதப்பட்ட இலக்கணம், இலக்கியம் , சிறுகதை செய்யுள், நாடகம், கட்டுரை, புதினம் போன்றவற்றால் தமிழ் தலைநிமிர்ந்தது. ஒட்டக்கூத்தர், கம்பன், வள்ளுவர், பாரதியார், வீரமாமுனிவர் போன்றோர்கள் தமிழை பெருமையோடு வளர்த்தனர்.

தமிழின்மீது கொண்ட பற்றால் வீரமாமுனிவர் என பெயர் மாற்றிக் கொண்டவர் தான் பெஸ்கி பாதிரியார் இவர் இத்தாலியில் பிறந்தாலும் தமிழ் மொழியின் பற்றால் தமிழகத்திற்கு வந்து தமிழை வளர்த்தார். இவர் எழுதிய தேம்பாவணி என்ற பெருங்காவியம் தமிழின் புலமைக்கு பெரிதும் சான்றாக உள்ளது. ஐயன் வள்ளுவன் எழுதிய திருக்குறள் என்னும் நூல் உலகப்

பொதுமறை ஆக உள்ளது. அதில் இடம்பெறாத கருத்துக்களே ஒரு மனிதன் தன் வாழ்வில் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை பற்றி கூறும் நூல் எமது தமிழ் மொழியில் தான் உள்ளது.

"சாகும்போது தமிழ் படித்து சாக வேண்டும்
என் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்"!

என்ற க. சச்சிதானந்தம் தமிழ் மொழிக்கு அழகு சேர்த்து தமிழை வளர்த்துள்ளார்.

சங்க காலத் தமிழ்

சங்க இலக்கியங்கள் என்ற சிறப்பை பெறுநர்கள் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். மொழி வரலாற்றில் தற்காலப் பகுதியை பழந்தமிழ் காலம் என்பர். பழந்தமிழ் காலத்தை முன் பழந்தமிழ், பின்பழந்தமிழ் என இரண்டாகப் பிரிப்பர். திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கியம் சங்கம் மருவிய காலத்தில் தோற்றம் பெற்றன.

சங்க இலக்கியத்தில் 12 உயிர் எழுத்துக்களும் மொழி முதலில் வந்துள்ளன மெய் எழுத்துக்களுள் க, த, ப, ம என்ற மெய் எல்லா உயிரெழுத்துக்களோடும் இணைந்து மொழி முதலில் வரும் என தொல்காப்பியர் கூறுகிறார். இந்த சிறப்பு நம் தமிழ் மொழியில் மட்டுமே உள்ளது என்ற பெருமை தமிழனையே சேரும்.ஆணை உயர்வாகவும், பெண்ணை தாழ்வாகவும், பேசும் மொழிகளுக்கிடையில் பெண்ணின் வீரம் பெருமை பற்றி பேசும் இலக்கியங்கள் தமிழ் மொழியில் ஏராளம்.வடமொழியின் துணை இன்றி தனித்து இயங்கும் தன்மை கொண்டது என் தமிழ் மொழி என்றவர் கால்டுவெல்.

செம்மொழியான தமிழ்

பதினோரு தகுதிகளைப் பெற்றிருந்தால் மட்டுமே ஒரு மொழி செம்மொழி என்ற பெருமை அடையும் அந்த வகையில் 'செம்மொழி' என்ற தகுதியை பெற்ற ஒரே மொழி என் தமிழ் மொழியே! இந்த செய்தியை எடுத்துரைக்கும் வகையில் மறைந்த முன்னாள் முதல்வர் திரு.மு.கருணாநிதி அவர்கள் 'செம்மொழியான தமிழ் மொழியாம்' என்று கூறினார். மேலும் இவர் 2004 இல் தமிழ் மொழியை செம்மொழியாக மாற்ற முயன்றார்.

உலகின் செம்மொழிகளான இலத்தின், கிரேக்கம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளோடு தமிழ் மொழியும் அடங்கும். மற்ற மொழிகளில் எழுத்து சொல் ஆகியவற்றிற்கு மட்டுமே முழுமையான இலக்கணம் உண்டு. பண்டைய மக்களின் அகம் புறம் பற்றி பேசும் ஒரே மொழி தமிழ் மொழி மட்டுமே.

முடிவுரை

அன்றைய காலத்திலும் சரி தற்போதைய காலத்திலும் சரி தமிழுக்கு எதிர்ப்புகள் இருந்து கொண்டே தான் இருக்கிறது. இருப்பினும் அதனை எதிர்த்து நாம் தமிழை உயர்ந்த வானம் போல ஓடும் நதி போல வளர்க்க வேண்டும். ஒருவன் எந்த மொழியை கற்றாலும் பயன்பெறலாம், ஆனால் தமிழ் மொழியை பயின்றால் மட்டுமே வாழ்வின் உயர்ந்த நிலை அடையலாம். எனவே தமிழை வளர்ப்பது தமிழர்களாகிய நமது கடமையாகும்.

ச. சாரதி
முதலாம் ஆண்டு
முதுகலை தமிழ் இலக்கியம்.

பழந்தமிழரின் அறிவியல் சிந்தனைகள்

பழந்தமிழர்கள் அறிவு நுணுக்கமும், பட்டறிவும் கொண்டு சிறப்புற்று வாழ்ந்திருந்தார்கள். தமிழர்களின் நுண்ணறிவு வியக்கத்தக்க ஒன்றாக அமைகிறது. இன்று வளர்ந்துள்ள பல அறிவியல் துறைகளின் வித்துக்கள் அன்றே இருந்தமைக்கான பல்வேறு சான்றுகளை அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

வானியல், மண்ணியல், இயற்பியல், உயிரியல், பயிரியல், மருத்துவவியல், கட்டிடவியல் என பல துறைகளின் செய்திகளை எடுத்துக்காட்டுவது இக்கட்டுரையின் நோக்கம். தமிழர்கள் வானியல் அறிவு பெற்றிருந்தார்கள் இந்த உலகம் ஒன்றையொன்று சார்ந்து இயங்குகிறது. நிலம் மண்ணால் நிரப்பப்பட்டுள்ளது, நிலம் ஏந்திய விசும்பும், வான் என்ற விசும்பைச் சுற்றிய காற்று, காற்றை பரப்பும் தீயும், தீக்கு எதிரான நீரும் என ஐம்பூதங்களாய் கலந்தது என்ற வரையறையின் வழி புறநானூற்று பாடல்களிலேயே பஞ்சபூதங்களின் சேர்க்கையே இவ்வுலகம் எனக் கூறுகிறது. இதனுள் ஐன்ஸ்டீனின் சார்பியல் கொள்கைச் சிந்தனைக் கூறுகள் இருப்பதைக் காணலாம்.

பழந்தமிழரின் காலம் பற்றிய அறிவு

ஆண்டினை கார்காலம், கூதிர்காலம், இளவேனில், முதுவேனில், முன்பனி, பின்பனி என ஆறு வகையாக பிரித்தனர். நாளினை யாமம், வைகறை, விடியல், காலை, ஏற்பாடு, மாலை என ஆறு வகையாக பிரித்தனர். இவை பழந்தமிழரின் காலம் பற்றிய கூர்மையான அறிவு பற்றிய வெளிப்பாடாகும். மேலும் வானில் உலவும் கோள்கள் பற்றியும் குறித்துள்ளனர். கதிரவன் பற்றியும், சூரியன் பற்றியும், செம்மீன் என்ற செவ்வாய் கோள் பற்றியும் செய்திகள் சங்க இலக்கியத்தில் காணக்கிடைக்கின்றன. அமாவாசை, பவுர்ணமி என இன்று குறிக்கப்படுவதினை தமிழர்கள் அன்று வெள்உவா என்றால் பவுர்ணமி என்றும் கார் உவா என்றால் அமாவாசை என்றும் குறித்தனர்.

நீர் நிறமற்றது

இவையெல்லாம் பழந்தமிழரின் வானியல் நுட்பத்தினை எடுத்துரைக்கிறது. மேலும் நிலம் பற்றியும், நீர் பற்றியும், அதன் இன்றியமையாமை பற்றியும் பழந்தமிழ் நூல்கள் செப்புகின்றன. நிலம், நீர் இணைவே உணவு, உணவே உயிர்களின் அடிப்படை என்ற உயரிய தத்துவம் குடபுலவியனார் என்ற புலவர் புறநானூற்றில் கூறுகிறார். மேலும் செம்மண்ணிலே வீழ்ந்த தண்ணீர் எவ்வாறு சிவப்பான நிறத்தை பெறுகிறதோ, அதைப்போல காதலரும் நானும் இணைந்தோம் என்ற புகழ் பெற்ற சங்கப்பாடலில் தண்ணீர் நிறமற்றது அதை எந்த மண்ணைச் சார்கிறதோ அந்த நிறம் பெறும் என்ற அறிவியல் உண்மையை காதல் பாடல் வழி எடுத்துரைத்துள்ளனர்.

உலகத்தின் இயல்புகளை தமிழர்கள் அறிந்திருந்தனர். இன்றைய இயற்பியலில் குவாண்டம் என்ற கொள்கை நவீன இயற்பியல் கொள்கை அறிஞர் நலங்கிள்ளி என்ற அறிஞர் மெக்கானிக்கல் யுனிவர்ஸ் என்ற நூலினை இயந்திர அண்டம் என மொழிப்பெயர்த்துள்ளார். குவாண்டம் என்ற சொல்லுக்கு 'அக்குவம்' என தமிழில் மொழிப்பெயர்த்துள்ளார். அக்கு அக்காக ஒளி உமிழப்படுவதை அக்குவம் எனக் கூறியுள்ளார். குவாண்டம் என்ற சொல்லை விடவும் கூட அறிவியல் துல்லியம் வாய்ந்தது இச்சொல் என தமிழரின் அறிவினை வியக்கிறார்.

வானியல் தெளிவு

வானியல் அண்டவியல் அறிவு இருந்தமைக்கான பல சான்றுகள் கிடைக்கின்றன. 'அண்டப்பெருவெளியில் உருண்டைப் பெருக்கம்' 'அளப்பெரும் தன்மை வளப்பெறும் காட்சி' என திருநாவுக்கரசர் செப்புகிறார். அண்டம் என்ற பெருவெளியில் உருண்டையான கோள்களின் காட்சி அளவிட முடியாத வளமான காட்சியாக விளங்குகிறது என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. பழந்தமிழரின் அறிவியலில் உயிரியல் பற்றி மிகச் சிறப்பாக அறிந்திருந்தனர்.

தாவரவியல் சிந்தனை

தொல்காப்பியர் ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நான்கறிவுயிர், ஐயறிவுயிர், ஆறறிவுயிர் எனப் பாகுபாடு செய்திருப்பது இன்றைய தாவரவியல் சிந்தனைகளுக்கு முன்னோடியாக அமைந்துள்ளன.

ஓரறிவுயிர் – தொடுதல் உணர்வுடையவை தொட்டாச்சிணுங்கி, புல் போன்றன.

இரண்டு அறிவு – தொடுதல் உணர்வுடன் நாவினால் சுவைத்தல் உடையவை. அவை கிளிஞ்சல்கள், சங்கு, நத்தை, சிப்பி, போன்றன.

மூன்றறிவு – தொடுதல் நாவினால் உண்டாகும் சுவையுடன், மூக்கினால் மோந்து பார்த்தல் இவை செல், ஈசல், பட்டுப்பூச்சி, போன்றன. இவை ஓசையிட்டாலும் அந்த இடத்தை விட்டு நகர்வதில்லையே ஏனென்றால் தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர் அதற்கு செவியில்லை என விளக்கம் தருவது அவரின் நுண்ணறிவினைக் காட்டுகிறது.

நாலறிவுயிர் – தொடுதல், நாவின்சுவை, மூக்கால் உணர்தல் கண்ணால் காணுதல் வண்டு, குளவி போன்ற இனங்களைக் குறிக்கின்றார்.

ஐந்தறிவுயிர் – மேலே கூறிய நான்கு உணர்வுடன் செவிஉணர்வு சேருவது இவை விலங்குகள் பறவைகள், மீன், முதலை, ஆமை போன்றவை.

மேற்சொன்ன இந்த ஐந்தும் சேர்ந்து மனம் என ஒன்றுபட்டுசிந்திக்கின்ற அறிவு பெற்றவர்களையே தொல்காப்பியர், ஆறறிவுடையவர்– மாந்தர் என வகைப்படுத்துகிறார். தொல்காப்பியரின் அறிவியல் பார்வை அறிவியல் அடிப்படையில் உயிரினங்களை ஆறாகப் பிரித்திருப்பது வியக்கத்தக்கதாகும்.

மேலும் தாவரங்களை வகைப்படுத்தும் போது வயிரம் பாய்ந்த வன்மையான தாவரங்கள், வயிரம் பாயாத வன்மையான தாவரங்கள் என வகைப்படுத்துகின்றார். மூங்கில், வாழை, தென்னை, பப்பாளி, ஈச்சம் போன்ற

மரங்கள் வேர்கள் அதிகம் பரவாமல் உள்வெளி வெற்றிடமாக இருக்கும் என்பதை விளக்குகின்றார். வேம்பு, மா, பலா, அரசு, ஆல் போன்ற மரங்கள் உள்ளே வயிரம் பாய்ந்த மரங்கள் எனப்பிரிக்கிறார். இதையே' அகக்கால் புறக்கால்' என விளக்குவது பழந்தமிழரின் அறிவியல் அறிவினைச் செப்புகிறது.

மேலும் ஊர்வன, பறப்பன, ஆண்பால் பெயர் பெறும் விலங்குகள், பெண்பால் பெயர் பெறும் விலங்குகள் என விளக்குவது அறிவியல் திறன் சார்ந்ததாக அமைகின்றது.


மருத்துவவியல் அறிவு


பழந்தமிழரின் மருத்துவவியல் வியக்கத்தக்க ஒன்றாக இன்றும் அறியப்படுகிறது. இன்றைய அறுவை சிகிச்சைக்கான குறிப்பு அன்றே குழந்தை இறந்து பிறந்தால் வாளால் கீறிப் புதைக்கும் வழக்கம் தமிழரிடையே இருந்துள்ளது. மேலும் தமிழர்கள் உணவே மருந்து மருந்தே உணவு என வாழ்ந்தார்கள். அறிவியல் கண்டுபிடிப்புகள் சக்கரம் என்பது மிக முக்கியமான ஒன்றாகும்.

சக்கரங்களைக் கொண்டு மட்பாண்டங்களை வளைந்த குயவனின் சிறப்பை கலங்களை உருவாக்குகின்ற குயவனே என புறநானூற்றில் ஒரு மன்னனை அடக்கம் செய்யும் தாழியினை அளவு தொடர்பான செய்தி கூறப்பட்டுள்ளது. தச்சுத்தொழிலும், மட்பாண்டத் தொழிலும் தமிழரிடையே சிறந்திருந்தது. கட்டிடவியல், சிற்பக்கலை போன்றவற்றில் தமிழரின் அறிவியல் கூறுகளை காணலாம்.

பி .திவ்யா
தமிழ்த்துறை
உதவிப் பேராசிரியர்.

மாணவிகளின் கைவண்ணம்...





ரா. சுஜாதா– முதுகலை இரண்டாம் ஆண்டு, தமிழ் இலக்கியம்.




ரா. சுஜாதா, இரண்டாம் ஆண்டு, முதுகலை இலக்கியம்.



கோ. பூஜா – முதுகலை இரண்டாம் ஆண்டு – தமிழ் இலக்கியம்.



கு. தர்ஷிகா – இரண்டாம் ஆண்டு, தமிழ் இலக்கியம்.



ஜெ. ஹரிணி – முதலாமாண்டு, தமிழ் இலக்கியம்.



ச. சௌந்தர்யா – இளங்கலை இரண்டாம் ஆண்டு,
தமிழ் இலக்கியம்.




ரா. மங்கையர்கரசி – இளங்கலை இரண்டாம் ஆண்டு,
தமிழ் இலக்கியம்.



க. சரிதா – இளங்கலை இரண்டாம் ஆண்டு, தமிழ் இலக்கியம்.




செ. சுமித்ரா – இளங்கலை இரண்டாம் ஆண்டு, தமிழ் இலக்கியம்.



மு. பவித்ரா – இளங்கலை இரண்டாம் ஆண்டு, தமிழ் இலக்கியம்.




மு. பாக்கியா – இளங்கலை இரண்டாம் ஆண்டு, தமிழ் இலக்கியம்.




கி. கீர்த்தனா– இளங்கலை மூன்றாம் ஆண்டு, தமிழ் இலக்கியம்



ச. ஜெயா ஸ்ரீ – முன்றாம் ஆண்டு, தமிழ் இலக்கியம்.



ச. ஜெயா ஸ்ரீ – மூன்றாம் ஆண்டு – தமிழ் இலக்கியம்



தேவி லக்ஷ்மி – இரண்டாம் ஆண்டு, தமிழ் இலக்கியம்.



கு. புவனேஸ்வரி – இரண்டாம் ஆண்டு,
இளங்கலை, தமிழ் இலக்கியம்.

இளங்கலை தமிழ் இலக்கியம்
தமிழ்த்துறை நிகழ்வுகள்



தமிழ் பேராசிரியர்களுடன் கண்காட்சியில் கைலாய மலை இடம்பெற்ற பொழுது.....



கிறிஸ்துமஸ் தின கொண்டாட்டத்தில்

தமிழ் பேராசிரியர் பெருமக்கள்.....



தமிழ்த்துறையின் பொங்கல் விழா கொண்டாட்டத்தில் .....



கண்காட்சியில் ஸ்ரீரங்கம் கோயில் இடம்பெற்ற நிகழ்வு.



ஏ.பி.ஜே. அப்துல் கலாம் நினைவு தினத்தன்று.




வள்ளலார் சபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்




தமிழ்ப் பேரவை அன்று மாறுவேட போட்டியில் தமிழ்த்துறை மாணவிகள் பங்குபெற்ற போது.....



சேலம் மத்திய சட்ட கல்லூரியில் மாநில அளவில் நடைபெற்ற பேச்சு போட்டியின் முதன்மை நடுவராக பங்கேற்ற சிறப்பு.....



சேலம் மாவட்ட அளவில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியின் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் சிறந்த ஒருங்கிணைப்பாளருக்கான சான்றிதழ் பெற்ற நிகழ்வு.



காமராஜர் நினைவு தினம் அன்று.....



கந்தாஸ்ரமத்தில் தமிழ்த்துறை மாணவிகள் பார்வையிடலின் போது.....



வள்ளலாரின் ஆன்மீகப் பயணத்திற்கு தொடங்கிய நிகழ்வு.....



தமிழ்நாடு கவர்னர் மாளிகையில் நடைபெற்ற திருவருட்பிரகாச வள்ளலாரின் 201-வது பிறந்த நாள் விழாவின் நூல் வெளியீட்டு விழாவில் நமது தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்கள் கலந்து கொண்ட நிகழ்வு.




பாரதியாரின் நினைவு தினம் அன்று நமது தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்கள் மலர்கள் தூவி மரியாதை செலுத்திய தருணம்....



சிதம்பரம் நடராஜர் பெருமாள் கோவிலுக்கு ஆன்மீக சுற்றுப்பயணம்.



கல்லூரி முதல்வருடன் ஆசிரியர் தின விழா கொண்டாட்டத்தில்



சென்னை மாநகரம் தமிழ் சங்கம் நடத்திய திருக்குறள் மாநாட்டில் திருக்குறள் ஆய்வுநெறி செம்மல் விருது பெற்ற பொழுது....



மாண்புமிகு முதல்வர் ஸ்டாலின் திருகரங்களால் முனைவர் பீ. ரகமத் பீபி அம்மா அவர்கள் கலைஞருடைய தேன் அலைகள் ஓர் ஆய்வு என்ற புத்தகத்தை வெளியிட்ட போது....



முத்துமலை முருகன் கோவிலில் கந்தபுராணத் தொடர்சொற்பொழிவில் உரையாற்றிய மைக்கு Shri முத்துமலை சேயோன் எனும் விருது வழங்கியபோது.....



உலகை திருப்பிய முருகன் எனும் தலைப்பில் கவிதை வழங்கியமைக்கு பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் தமிழ்கவிச்செம்மல் விருது வழங்கிய போது.....



சாரண சாரணிய இயக்கம் சார்பாக குன்னூரில் ஒன்பது நாள் பயிற்சி பெற்று சான்றிதழ் பெற்ற தருணம்.



பெரம்பலூர் புத்தகக் கண்காட்சியில் தமிழ்த்துறை மாணவிகள் கலை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பொழுது ....



ஆண்டு விழா தருணத்தில் தமிழ்த்துறை பேராசிரியர்கள் .....



காவேரி கல்லூரியில் சிறந்த முன்னாள் மாணவி என்ற விருது பெற்றமைக்கான முதல்வரை தமிழ்த்துறை பேராசிரியர் பெருமக்கள்கள் சிறப்பு செய்த தருணம் ....

முன்னாள் மாணவிகளின் மதிப்பீடு



உருவமற்ற கற்களை வடித்து சிலையாக மாற்றும் கலைக்கூடமாக திகழ்ந்து கொண்டிருக்கும், எமது பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரிக்கு முதற்கண் வணக்கம். மேலும் அத்தகைய கலைக்கூடத்தின் கைதேர்ந்த சிற்பிகளாக வருடம்தோறும் ஆயிரக்கணக்கான சிலைகளை உருவாக்கி கொண்டு இருக்கும் எமது பேராசிரியர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் எமது தோழிகளுக்கும் அன்பு கலந்த வணக்கம் .நமது கல்லூரியைப் பற்றியும் பேராசிரியர்களைப் பற்றியும் கூற வேண்டுமானால் பக்கங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். எண்ணிலடங்கா வாய்ப்புகளை அள்ளித் தர ஒவ்வொரு நொடியும் காத்துக் கொண்டு இருக்கின்றனர்.அத்தகைய வாய்ப்புகளை உங்களின் இலட்சியம் என்னும் கோபுரத்தை அடைவதற்கான படிகட்டுகளாக மாற்றிக்கொள்ள வேண்டிய பொறுப்பு மாணவிகளாகிய நம்

கையில் தான் உள்ளது.அதற்கான வழிவகைகளை செய்து தருவதற்கு நம் பாரதியார் கல்லூரியும் தமிழ் துறையும் ஒருபோதும் தவறியதில்லை என்பதை, ஒருகணம் தலைநிமிர்ந்து சொல்வதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. எம்முடைய வளர்ச்சிக்கு பெரிதும் துணை நின்ற கல்லூரிக்கும் தமிழ்த்துறை பேராசிரியர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் .

தி. சுஜிஹாரணி
முன்னாள் மாணவி
கிளை அஞ்சலக அதிகாரி
பட்டுத்துறை கிளை அஞ்சலகம்
தலைவாசல்.

வெற்றிக்கு வழி



பிறர் வகுத்த பாதையில் நீ செல்வதால் பயனில்லை நீ வகுத்த பாதையில் பிறர் செல்லுமாறு பயனான வாழ்க்கையை வாழ்ந்து காட்டு... அடைந்த வரை உன் முன்னுதாரணமாக வைத்து உன் வாழ்க்கை வாழாதே!உன்னை முன்னுதாரணமாக வைத்து பிறர் வாழுமாறு உன் வாழ்க்கையை வாழ்ந்து காட்டுஎல்லாம் சில காலம்தான் இன்பமோ துன்பமோ.... அது உன் வாழ்க்கையின் வரம் அதை நீ மனதார ஏற்றுக்கொண்டு வாழப் பழகிக் கொள்... வெற்றியடைந்தவரின் சரித்திரத்தை படித்து நீ மகிழாதே.... உன் வெற்றி சரித்திரத்தை பிறர் படிப்பதை நினைத்து நீ மகிழ்ந்து கொள் எதிலுமே முதலில் வெற்றியை அடைய வேண்டும் என்று நீ ஆசை கொள்ளாதே.... முதலில் தோல்வியை சந்தித்துப் பார் ஏனென்றால் வெற்றியின் வழி தோல்விக்கு தான் தெரியும்.

மு.பவித்ரா,
முன்னாள் மாணவி
பெண்காவலர் எண்; 59032,
இரண்டாம் நிலை பெண்காவலர்,
ஆயுதப்படை – 1, புதுப்பேட்டை,

உயர்ந்து நில்...



அன்னை தமிழுக்கும் மற்றும் பல தமிழ் பாவை அறிஞர்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் சிலையாக நிற்கும் எமது பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரிக்கும் எனது முதற்கண் வணக்கம். கல்லூரியில் இருக்கும் பல புலவர்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் பேராசிரியர்களுக்கும் என் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். கல்லூரியில் பயிலும் என் அன்பு தோழிகளுக்கும் எனது வணக்கம். நமது கல்லூரியை பற்றி கூறவேண்டுமானால் பல நன்மைகள் கூறிக் கொண்டே போகலாம். அப்படி பல கற்களை செதுக்கி சிலையாக மாற்றிக் கொண்டிருக்கின்ற சிறந்த பேராசிரியர்கள் உள்ளனர். நீங்கள் பாரதி கண்ட புதுமைப் பெண்கள் என்றேக் கூறலாம். ஏனென்றால் பாரதியார் கல்லூரியில் படிக்கும் நீங்கள் அங்குள்ள ஒவ்வொருவரையும் பயன்படுத்தி முன்னேற வேண்டியது மாணவிகளாகிய நம் கையில் தான் உள்ளது. அதற்கான வழிகளை தடையில்லாமல் எப்பொழுதும் உறுதுணையாக இருக்கும் நம் பாரதியார் கல்லூரியும் தமிழ் துறையும் பெரும் துணையாகவும் இருக்கின்றனர். வாய்ப்புகளை அள்ளித் தருவதற்கு அவர்கள் தயாராக உள்ளனர் பயன்படுத்திக் கொள்ள நாம் தயாராகுவோம். எம்முடைய இந்த வளர்ச்சிக்கு பெரிதும் துணை நின்ற கல்லூரிக்கும் தமிழ்த்துறையில் உள்ள அத்தனை பேராசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அனைவருக்கும் நன்றி.....

ப. கோகுலவாணி
லக்ஷ்மி கலை மற்றும் அறிவியல் கல்லூரி
பங்காரம், கள்ளக்குறிச்சி.


மாணவிகளின் சாதனைகள்!!!




பெரியார் பல்கலைக்கழக அளவில் இளங்கலை தமிழ் இலக்கியம் பயின்ற மாணவி ரா. கிரிஷா (2021-2022) அவர்கள் தங்கப்பதக்கம் பெற்ற பொழுது....



பாரதியார் பிறந்த நாள் கவிதைப்போட்டி 500 ரொக்கம் –முதுகலை இரண்டாம் ஆண்டு, பூஜா அவர்கள்....



பாரதியார் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நடைபெற்ற கவிதைப் போட்டியில் முதுகலை இரண்டாம் ஆண்டு தமிழ் இலக்கியம் மாணவி கி. நிஷாபாரதி பங்கேற்று ரூபாய் 750 ரொக்க பரிசு பெற்றார்.



பாரதியார் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதுகலை இரண்டாம் ஆண்டு தமிழ் இலக்கியம் மாணவி சு. கௌசகி பங்கேற்று ரூபாய் 500 ரொக்க பரிசு பெற்றார்.



அறிஞர் அண்ணா கலை அறிவியல் கல்லூரி நடத்திய பெரியார் பிறந்த நாள் விழாவில் முதுகலை இரண்டாம் ஆண்டு, பூஜா அவர்கள் பங்குபெற்று பரிசுத்தொகை பெற்ற பொழுது ....



பகுத்தறிவாளர் கழகம் மாநில அளவிலான பேச்சுப்போட்டி சென்னை பாராட்டுச் சான்றிதழ் 07.09.2024.



இலக்கிய பேரவையில் தமிழ்த்துறை தலைவருடன்.....



பெரியார் பகுத்தறிவு விழாவில் கலந்து கொண்ட பொழுது.....





ஆசிரியர் தினம் கவிதை போட்டி முதல் பரிசு –கோ. இலக்கியா, இரண்டாமாண்டு, தமிழ் இலக்கியவியல்.



பாரதி மகாத்மா பண்பாட்டுப் பேரவை கலை நிகழ்வின் போது.....



செய்தி வாசித்ததில் இரண்டாம் இடம் - ப. பிரியதர்ஷினி

முதுகலை முதலாம் ஆண்டு.



ஆசிரியர் தின கவிதைப் போட்டியில் 2 ம் பரிசு – சே. ரேணுகாதேவி
மூன்றாம் ஆண்டு – தமிழ் இலக்கியம்.



பாரதி மகாத்மா பண்பாட்டுப் பேரவை
கலை நிகழ்வுகளில் கலந்து கொண்ட தருணம் ....

தமிழ்த்துறை வழங்கும் !!!

சொங்காந்தள்

மாணவியர் இதழ்-1

இதழ் வெளியீட்டாளர்

முனைவர் தே. இராஜகுமாரி.
முதல்வர்,
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி.

இதழ் ஆசிரியர்

முனைவர் சு. இந்திரா
தமிழ்த்துறை தலைவர்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி.

இதழ் துணை ஆசிரியர்கள்

முனைவர். ரஹ்மத் பீபி
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி.

மா.ஷர்மிளா
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி.

ரா.ஐஸ்வர்யா
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்
பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி.

இதழ் ஆலோசனைக் குழு ஆசிரியர்கள்

- வி. ரேகா M.A., M.Phil., B.Ed.,
- கு. நிவேதா M.A., M.Phil., SET.,
- க. புஷ்பா M.A., B.Ed., M.Phil.,
- அ. ரஞ்சிதா M.A., M.Phil., NET.,
- ந. ரேவதி M.A., B.Ed., M.Phil.,
- க. சுமதி M.A., M.Phil., NET.,
- முனைவர் ஸ்ரீ. அழகுலெட்சுமி M.A., M.Phil., NET., SET., Ph.D.,
- முனைவர் தி. மணிமேகலை M.A., M.Phil., B.Ed., Ph.D.,
- பி. திவ்யா M.A., M.Phil., B.Ed., NET.,
- நா. உமாராணி M.A., M.Phil.,
- கோ. ஜானகி M.A., B.Ed., M.Phil.,
- மு. கலைச்செல்வி M.A.,

ஸ்ரீ சக்தி அறக்கட்டளையின்



பாரதியார்

மகளிர் கலை அறிவியல் கல்லூரி

தேவியாக்குறிச்சி.



இங்ஙனம்...

தமிழ்த்துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள்.